இரவி

கலை இலக்கிய காலாண்டுக் கதிர்

ஈழத்தமிழ்த் திரைப்பட இயக்குனர் விநோத்
அவர்களுடன்
'சொல்லாமேலே ஒரு சந்திப்பு'

ஆடி ~ புரட்டாசி 2025 கதிர் ~ 5 வெளியீடு: இரவி சஞ்சிகை இலங்கை

இரவி

கலை இலக்கிய
காலாண்டு இதழ்

பிரதம ஆசிரியர்: நரேஸ் நியூட்டன்

கதிர் 05

ஆடி - புரட்டாதி 2025

உங்கள் படைப்புகளை அனுப்ப:

iravi.magazine@gmail.com

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்

நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

இந்த இதழை தங்கள் படைப்புகளால் அலங்கரித்த ஆளுமைகள்

இரவி கதிரின் உள்ளே....

கதிர் வீச்சு

நேர்காணல்

சொல்லாமலே ஒரு சந்திப்பு ஈழத்தமிழ் திரைப்பட இயக்குனர் வினோத் அவர்களுடன்

கட்டுரை

தமிழிசை—ஒரு பருந்துப் பார்வை

ஈழத்தில் வெளிவந்த தமிழ்த்திரைப்படங்கள் ஒரு தேடல்

சிறுகதை

தவழும் தென்றலுக்கு என்னைப்புரியாதா

துணிந்து நில்

போலி உறவுகள்

கடவுளே வேண்டுகிறேன்

நிறம் மாறும் மனிதர்கள்

நூல் அறிமுகம்

பறவைகள்

பத்தி

ஹவாய் பழங்குடி மக்களுடன் சில நாட்கள்

கவிதைகள்

ஐக்கியமே பலம்

எளிமை

மரங்கள்

அழுக்கு மூட்டை

குடும்பம்

மரங்கள் காப்போம்

அது ஒரு கனத்த நாள்

கண்ணாடி - மனம்

இளையவன் சிவா கவிதைகள்

வெள்ளை மனம் - நேரிசை வெண்பா மரபுக்கவிகள்

துளிப்பாக்கள் (ஹைக்கூ)

தொடர் நவீனம்

கரிசல் மண்ணில் ஒரு காவியம் - பாகம் - 3

நிகழ்வுகள்

குவியம் விருதுகள்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ‘கதைச்சரம்’ சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

கதிர் வீச்சு....

உலகெங்கும் பரந்து தமிழ் தாயக மண்ணின் வாசம் மறையாது மணம் பரப்பி கிளைகள் பரப்பி தமிழ வளர்த்துத்தமிழுக்கு சான்றாக விளங்கி நிமிர்ந்து நிற்கும் அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் நற்றமிழ் வணக்கம்.

இரவி மின் இதழின் ஐந்தாவது இதழுடன் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருவது என்பது இன்று மிகவும் சிரமமான விடயமே என்பதை இரவி இதழை ஆரம்பித்து வெளியிடத் தொடங்கியதன் பின்னர்தான் எம்மால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. 1985இல் ஒரு சஞ்சிகை வெளியிட் டிருந்தேன் அது கையெழுத்துப் பிரதியாக ஆரம்பித்து 3 இதழ்களும் பின்னர் அச்சுப் பிரதிக்கு மாறி 3 இதழ்களும் வெளிவந்ததோடு நிறுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டு நிறுத்தினேன்.

அந்தக் காலப்பகுதியில் எமது மண்ணில் அந்த சஞ்சிகை நின்று போனதற்கு காரணம் வேறு, தற்காலத்தில் எமது மண்ணில் சஞ்சிகைகள் வெளிக்கொணர்வதில் ஏற்படும் பிரச்சனைகள் வேறு. இவற்றுக்கெல்லாம் முகம்கொடுத்து இந்த இதழுடன் உங்களை சந்திப்பது ஒரு பெரிய சாதனைதான்..

இரவி சஞ்சிகை நாளுக்கு நாள் தனது வாசகர்களை அதிகரித்துச் செல்கிறது. இதழ் கிடைக்கும் பல வாசகர்கள் அதனை ஏனைய தங்கள் நண்பர்களுடனும் பகிர்ந்துகொள்வதால் இதனுடைய வாசகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இந்த இதழ் உலகெங்கணும் வாழும் வாசிப்பில் ஆர்வமுள்ள அனைத்து தமிழ் நெஞ்சங்களையும் சென்றடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதனை செய்வதில் எம்மோர்டு கைகோர்த்து நிற்கும் உங்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

எமது சஞ்சிகையோடு மேலும் பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆய்வாளர்கள், கட்டுரையாளர்கள், கதாசிரியர்கள் இணைய வேண்டும்மென்பது எங்கள் எதிர்பார்ப்பு. பலர் இணைந்து தங்கள் படைப்புகளை இரவி சஞ்சிகையூடாக வெளியிட முடியும். அதேபோலவே இளம் படைப்பாளர்கள், புதிய படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளை தயக்கமின்றி எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம் எதிகாலத்தில் பிரசித்திபெற்ற படைப்பாளர்களாக வலம் வருவதற்கு உங்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறோம் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பாடசாலை மாணவர்களும் எம்மோடு இணைந்து உங்கள் படைப்புகளை இரவி சஞ்சிகை மூலம் வெளியிட்டு உங்கள் படைப்பாற்றலை வளர்த்துக்கொள்ளுங்கள்.

அதுமட்டுமல்லாது உங்கள் பிரதேசங்களில், பாடசாலைகளில் இடம்பெறும் முத்தமிழ் இலக்கியம் சார் நிகழ்வுகளை எமக்கு எழுதி புகைப்படங் களுடன் இணைத்து அனுப்புங்கள். அவற்றை இரவி சஞ்சிகை வெளியிடுவதற்கு களம் அமைத்துத் தருகிறது. அனுமதி பெறப்படவேண்டிவற்றுக்கு அனுமதி பெற்று அனுப்புங்கள்.

*அண்மையில் எமது தேசத்தில் இருந்து வெளிவரும் மூத்த நாளேடு '**வீரகேசரி**' தனது 95வது அகவையை நிறைவு செய்திருந்தது. இலங்கையில் முதன் முதலில் வெளிவந்த தமிழ் பத்திரிகை '**உதய தாரகை**' அதைத் தொடர்ந்தே ஏனைய பத்திரிகைள் வெளிவரத் தொடங்கின. அவற்றுள் ஒன்று வீரகேசரி. கடந்த காலங்களில் பல பத்திரிகைகள் வெளி வந்திருக்கின்றன. அவற்றுள் பல இன்று காணாமல் போய்விட்டன. பல இன்னமும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையில் '**வீரகேசரி**'' மிகவும் மூத்த தமிழ்ப்பத்திரிகை.*

ஆவணிப்பட்டி பெ. பெரி.. சுப்ரமணியம் செட்டியார் அவர்களால் 8 பக்கங்களையுடைய பத்திரிகையாக 6ஆம் திகதி ஆவணி மாதம் 1930ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகை வெளியிடப்பட்டது . இதனுடைய அச்சகம் கொழும்பு செட்டியார் வீதியில் அமைந்திருந்தது. ஆரம்பித்தபோது பெ. பெரி. சுப்ரமணியம் செட்டியார் அவர்களே இதன் ஆசிரியராகவும் இருந்தார். இவருக்கு துணையாக அவரது நண்பர் எச். நெல்லையா என்பவர் அதிகமான விடயங்களை கவனித்துக்கொண்டவர். இவர் ஒரு வங்கியாளரும் சிறந்த புதின எழுத்தாளரும் ஆவார். இந்தக் காலப்பகுதியில் தமிழ் நாட்டில் இருந்து சுதேச மித்திரன், நவசக்தி போன்ற தமிழ்ப்பத்திரிகைகள் வெளி வந்துகொண்டிருந்தன.. அதேபோல் மலேசியாவில் இருந்து தமிழ் நேசன் என்ற பத்திரிகையும் இலங்கையிலிருந்து உதயதாரகை என்ற பத்திரிகையும் வெளிவந்துகொண்டிருந்தன. உதய தாரகை வாரம் ஒருமுறை வெளிவந்த கிறிஸ்தவ மத அமைப்பு ஒன்றினுடைய பத்திரிகை..

நான் முன்னர் குறிப்பிட்ட பத்திரிகைகளில் பலவும் அதன் பின்னர் வெளி வரத்தொடங்கிய பத்திரிகைகள் பலவும் பல்வேற காரணங்களால் காணாமல் போயின. ஆனால் வீரகேசரி நாளிதழ் தனது 100வது அகவையை நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந்த வகையில் இது இந்த ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் திகதியோடு தனது 95ஆவது அகவையை பூர்த்தி செய்து ஆடுத்த ஆண்டிற்குள் நுளைந்தமை மகிழ்ச்சிக்குரியதும் பெருமைக்குரியதுமாகும். இதனுடைய இந்த வெற்றிக்குக்காரணமாக இருந்தது தொடர்ச்சியாக காலத்துக்குக் காலம் இந்த பத்திரிகையில் பணியாற்றி வந்த அதன் முகாமைத்துவமும், ஆசிரிய ஆளுமைகளும் அத்தோடு அதன் வாசகப்பெருமக்களுமே ஆகும். அது மட்டுமன்றி காலத்தோடு சேர்ந்து வீரகேசரியும் தன்னை புதிய தொழில் நுடபங்களோடு இயைபுபடுத்திகொண்டு சரிசமமாக நகர்ந்தமையும் காரணமாகும்.

இதன் வெற்றிக்கு உழைத்த உரிமையாளர் வாரிசுகள் அனைவருக்கும் முகமைத்துத்தில் பணியாற்றியவர்களுக்கும் வீரகேசரியுடன் தொடர்ந்து பயணித்த அத்தனை படைப்பாளர்களுக்கும், ஆரம்ப காலங்களில் அச்சுக்கோர்ப்பில் ஈடுபட்ட பணியாளர்களுக்கும் தற்போதய தொழில் நுட்பவியலாளர் களுக்கும், இயந்திரை இயக்குனர்களுக்கும், கலைஞர்கள் அனைவருக்கும் வாசக பெருமக்களுக்கும், 95ஆவது அகவை நன்நாள் வாழ்த்தை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். மென்மேலும் வளர்ச்சிபெற்று பல நூறு ஆண்டு அகவைகளை கடந்து சாதிக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

*அடுத்து நம் சினிமா விருதுகள் என்ற தொனிப் பொருளில் நமது திரைத்துறை கலைஞர்களுக்கு விருது வழங்கும் சிறப்பான செயற்பாட்டை '**குவியம்**' நிறுவனம் நிகழ்த்தி வருகிறது. இதனை தனித்து நின்று தனது நண்பர்கள் சிலருடைய ஆதரவோடு சர்வதேச நாடுகளில் இடம்பெறும் விருது வழங்கும் நிகழ் வுகளுக்கு நிகராக நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் இதன் **நிறுவுநர் வரோதயன் கனகநாயகம்** அவர்கள். இவரது இந்த செயற்பாடு சிறப்பானதும் பாராட்டுதற்குரியதுமாகும். பல சிரமங்களுக்கு மத்தியிலே பணம் பொருள் செலவுகளை அநேகமாக தமது சொந்த வருவாயிலிருந்தே திரைத்துறை வளர்ச்சிக்காக முதலீடு செய்து. முதலீட்டுக்கான நிகர வருமானம்கூட கிடைக்கப்பெறாமல் தொடர்ந்து படைப்புத்துறையில் சாதித்துக்கொண்டிருக்கும் எமது திரைத்துறைக் கலைஞர்களை கொண்டாடவேண்டியது எமது தலையாய கடமையே. இதனை **வரோதயன்** மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார். இது நான்காவது ஆண்டு விருது வழங்கும் விழா. இந்த ஆண்டுபோல் தொடர்ந்து ஏனைய பல ஆண்டுகள் இந்த நிகழ்வு தொடர்ந்து சிறப்பாக இடம்பெற எமது வாழ்த்தை தெரிவிக்கிறோம்.*

இதழ் உங்கள் கரங்களில், படியுங்கள் உங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். அடுத்த இதழில் சந்திக்கும்வரை அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வண்ணம்

பிரதம ஆசிரியர்

நரேஸ்

ஈழத்தமிழ் திரைப்பட இயக்குனர் வினோத் அவர்களுடன்

வணக்கம் வினோத்

வணக்கம் அண்ணா

நீண்ட காலத்திற்கு பின்னர் உங்களை சந்திக்கிறேன். வித்தியாசமான ஒரு களத்தில் உங்களை சந்திப்பது மனதிற்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது. இதற்கு முன்னர் வெவ்வேறு இடங்களில் பணிசெய்திருக்கிறீர்கள். தற்போது தமிழ் திரைப்படத்துறைக்குள் நுளைந்திருக்கிறீர்கள் என அறிந்ததும் ஒரு மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கு அதைப்பற்றி சொல்ல முடியுமா? எப்படி நீங்கள் இந்தத் துறைக்குள் காலடி எடுத்து வைத்தீர்கள், இதற்குள் நுளைவதற்கான காரணங்கள், சூழ்நிலைகள்பற்றி கூறுங்கள்?

ஆமாம்… நான் 2008இல் உண்மையாக உயர்தரம் முடிந்தவுடனேயே முதலாவதாக நான் செய்த வேலையே இந்த துறைக்குள் வந்ததுதான். ஒரு இசை தொகுப்பு (Music Album) ஒன்றை செய்திருந்தேன். அப்போது எனக்கு என்ன தெரியுமோ அதை வைத்து ஒரு இசை தொகுப்பை தாயாரித்தேன். அதற்கு பின்னர் குறுந்திரைப்படங்கள், பாடல்கள் தயாரிப்பு போன்றவற்றிற்கான வேலைகளை தொடர்ச்சியாக செய்துகொண்டுதான் வந்தேன். ஒரு முழு நீளத் திரைப்படமொன்றை உருவாக்கியது 20021 - 2022இல்தான்.

அந்த ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது என்று கூறமுடியுமா?

ஆர்வம்… அது எனது சிறு வயதிலேயே உருவாகிய ஆர்வம். நான் படம் பார்ப்பேன்… சிறுவயதிலிருந்தே நிறைய திரைப்படங்கள் பார்ப்பேன். அனேகமாக ஒரு நாளைக்கு ஒரு படமாவது நான் பார்ப்பேன். அதன் மூலமாக உருவாகியிருக்கலாமோ என நினைக்கிறேன். அதைவிட வேறு உந்துதல் என்று ஏதும் இல்லை. படம் பார்ப்பதால் ஏற்பட்ட விருப்பம்தான். திரைப்படங்களின் உருவாக்கம் எப்படி இருக்கும் என்று பார்க்க ஆவல் இருந்தது. அதே போல் எனக்கும் சிலவிடயங்களை செய்து பார்க்கவேண்டும் என்று ஆசை இருந்தது அதுதான் தற்போது இந்த நிலைமைக்கு காரணமென நினைக்கிறேன்.

சொல்லாமலே ஒரு சந்திப்பு

உங்களுடைய ஏனைய பணியை செய்துகொண்டு இந்த செயற்பாட்டிலும் ஈடுபடுவதில் ஏதாவது…?

அதற்குள்ளே எனக்கு… ஒரே ஒரு சவால்தான். என்னுடைய நேரத்தை கடைப்பிடிப்பதில் ஒரு சிக்கல் ஒன்று வரும். மற்றப்படி ஒன்றுமில்லை. வேலை எனது வாழ்வாதாரத்தை தீர்மானிக்கவேண்டியது. இதை எனக்கு ஆதாராமாக வைத்துக்கொண்டு திரைப்படம் செய்வதற்கு, விரும்பிய ஒரு இடத்திலிருந்து ஒரு திரைக்கதையை எழுதுவதற்கு, அல்லது ஒரு கலந்துரையாடலை சென்று மேற்கொள்வதற்கு என்று எல்லாவற்றிற்கும் எனது பணி எனக்கு ஆதரவாக, எனது நிதி நிலைமையை நிலை நிறுத்துவதற்கு ஆதாரமாக இருக்கிறது. ஆனால் உண்மையாகவே கடினமான நிலைமை என்னவென்றால் காலை 8.30 முதல் மாலை 5.30வரை பணியில் ஈடுபட்டுவிட்டு அதன் பின்னர் 6.00 மணி 7.00 மணிக்கு தொடங்கி மறு நாள் காலை 2.00 மணி 3.00 மணிவரை நான் சினிமாவுக்குள்தான் நிற்பேன். இதைவிட சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஈடுபடுவேன் இதுதான் இப்போது என்னுடைய நேரமாக இருக்கிறது.

அப்படியாயின் வாழ்வாதாரத்துக்காக ஒரு தொழிலை வைத்துக்கொண்டு திரைப்படத்துறையை உங்கள் பொழுதுபோக்காக மன மகிழ்ச்சிக்காக என்று வைத்திருக்கிறீர்களா அல்லது அதையே எதிர்காலத்தில் வாழ்வாதாரமாக மாற்றுவதற்கான திட்டம் ஏதும் உண்டா…?

ஆமாம் எனக்கு அப்படித்தான் இருக்கிறது. நான் ஒரு முழு நேர சினிமா காரராக மாறவேண்டும் என்பதுதான் எனது எண்ணம் விருப்பம். அதற்கான அடித்தளத்தைத்தான் இப்போது நான் செய்துகொண்டிருக்கிறேன். எனக்கு… நான் இப்போது ஒரு படம் முடித்திருக்கிறேன்… அந்தப் படத்தினுடைய விளைவுதான் தீர்மானிக்கும் முழு நேர சினிமாவில் இருக்கிறதா என்பதை. அதற்காக காத்திருக்கிறேன். முழுமையாக சினிமாவிற்குள் போவதே சரியான முடிவு என்றும்

எனக்குத் தோன்றுகிறது.

நீங்கள் சினிமாத்துறைக்குள் வந்தவுடனேயே முழு நீளத்திரைப்படத்தை தயாரிப்பதோடுதான் வந்தீர்களா? அல்லது குறுந்திரைப்படம் அப்பிடி?...

ஆமாம்... முதல் குறுந்திரைப்படம்தான். முதல் **'ஏழு'** என்று ஒரு குறுந்திரைப்படம் எடுத்திருந்தேன். அதனை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் என்ற அமைப்பே தயாரித்திருந்தது. அதன் பின்னர் **'இருள்'** என்று ஒரு படம் எடுத்திருந்தேன். இப்படி 8 குறும்படங்களை இதுவரை நான் எடுத்திருக்கிறேன்.

ஆஹா.. சொல்லுங்கள் ஏனைய படங்கள் எவையென்று கூறலாமா?

அதன் பின்னர் **'மனம் கொத்தும் மகள்'**, அதற்கிடையில் **'புன்நகை'**, அதனேடு விழிப்புணர்வு சார் திரைப்படங்கள் சில அரசு சாராத நிறுவனங்களுக்கு செய்து கொடுத்திருக்கிறேன்.

அவற்றை செய்யும்போது சவால்கள் ஏதாவது இருந்ததா?

இருக்கிறது... இருக்கிறது...

எவ்வாறான சவால்கள்...?

ஒன்று எங்களுக்கான.. திரைப்படத்துறை சார்பான அறிவு என்பது சரியான குறைவு. காரணம் நாங்கள் சரியான ஒழுங்குமுறையான திரைத்துறை சார் கற்றலை மேற்கொள்ளவில்லை. ஒன்றை செய்து பார்த்துச்செய்து பார்த்தே அதன் மூலம் எங்கள் அனுபவங்களை பெற்றுக்கொள்கிறோம். அதுதான், நான் குறிப்பிட்டதுபோல **'ஏழு'** என்ற படம் எடுக்கும்போது திரைக்கதை வடிவம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நான் நாடக எழுத்து உருவாக்கம் செய்திருக்கிறேன். நாடக எழுத்து முறையில்தான் நான் சினிமாவுக்கான கதையையும் எழுதுகிறேன். அது ஒரு திரைக்கதை அமைப்புத்தானா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் எழுதுகிறேன்.

அதைப் போலவேதான் ஒரு கமறாவை பயன்படுத்தப்போகும்போது காட்சிப் பிரிப்பு (Shot divisions) பற்றியோ, காட்சி உருவாக்கம் (shot making) பற்றிய ஐடியோலேஜி எனக்குத் தொரியாது. நாங்கள் தயாரிக்கும்போது பார்கிறோம் இப்படி வைத்தால் நன்றாக இருக்கிறதே. இது குளோசப், இது மிட் என்று தெரியாது ஆனால் செய்து பார்க்கிறோம். அது ஒரு அனுபவம். இப்படி நிறைய சவால்கள் இருக்கின்றன.

கலர் கிரேடிங் (வர்ண தரப்பிரிப்பு) செய்ய வேண்டும் ஸ்கோர் இசையில் செய்ய வேண்டும். 5 பொயின்ட் டொல்பி (5 point Dolphy) செய்ய வேண்டும் என்பதுகூட முதல் தெரியாது. எங்களுடைய அறிவில் இல்லை இப்படியெல்லாம் செய்தால்தான் ஒரு படம் முழுமை பெறும் என்பது. ஆனால் காலப்போக்கில சினிமா செய்யச்செய்ய அல்லது சினிமா பார்க்கப்பார்க்க என்ன வித்தியாசமா இருக்கு ஏன் இந்தப் படத்தில் இந்த தரம் (quality) வரவில்லை, ஆனால் இங்கு நடந்திருக்கிறதே, அப்போ என்ன நடந்திருக்கிறது. என்பதைப்பற்றித் தேடுவது நிறைய யூடியூப் சனலில் அவர்களுடைய நேர்காணல்கள் (ஐவெநசஎநைறள) பார்க்கிறது. அப்போதான் விளங்கிக்கொள்ள முடியும், சினிமா என்பது ஒரு எழுத்துருவில் இருந்து முடிப்பது வரையிலுமான முழு செயற்பாடு என்பது என்னவென்று. பெரிய வேலைகள் எல்லாம் அதற்குள்ளே இருக்கிறது. அதுதான் அந்த அனுபவம்.

சரி.. அப்படியானால் அந்த சவால்களிலிருந்து விடுபடுவதாகவிருந்தால் என்ன செய்யவேண்டும், என்ன நடக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?. அதாவது இலங்கை தமிழ் திரைத்துறையில் என்னவெல்லாம் நடாந்தால் திரைத்துறைக்கலைஞர்கள் இவ்வாறான சவால்களுக்கு முகம்கொடுக்கலாம்,

ஒன்று எங்களுக்கான.. திரைக்கதை, சினிமா சார்ந்த துறைகள் தொடர்பான கற்றலுக்கான வாய்ப்புகள் நிறைய வரவேண்டும். அதேவேளை திரைத்துறையாக (Industry) நாங்கள் இன்னமும் வளர்ச்சி(னுநஎநடழி)யடையவில்லை, ஆகவே தொழில் சார் துறையாகவும் (ஐனௌளவசல) நாங்கள் வளர்ச்சி(Developed)யடைய வேண்டியிருக்கிறது. இதில் மிகவும் முக்கியமான சவால் இருக்கிறது என்னவென்றால் ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்ற நபர்கள் என்பது எங்களிடம் இன்னமும் உருவாகவில்லை. படிப்படியாக இப்போதுதான் வளருகிறோம். நிபுணத்துவம் வாய்ந்த ஒவ்வொரு துறையிலும்... இப்போ கலை இயக்கத்தில் (Art Direction) ஒரு நிபுணத்துவம், இசைத்(Music) துறையில் ஒரு நிபுணத்துவம், 5.1 கலவையில் (Mixing) ஒரு நிபுணத்துவம், வர்ணப்படுத்தலில் (Colorist) ஒரு நிபுணத்துவம், இவையெல்லாம் வந்தால் ஒரு துறையாக (ஐனௌளவசல) ஒரு நல்ல தொழிற்றுறைக் கலையாக மாறும்போது நாங்கள் இந்த சவால்களிலிருந்து விடுபடலாம்.

பொதுவாக ஒரு அபிப்பிராயம் ஒன்று இருக்கிறதுதானே ஸ்ரீலங்கன் தமிழ் திரைப்படத்துறையைப் (ஐனௌளவசல) பொறுத்தமட்டில் அல்லது ஈழத் தமிழ் சினிமா என்று சொல்லுவோமே.. அதைப் பொறுத்தமட்டில் நீங்கள் ஆரம்பத்தில் வாழ்வாதாரத்துகானதாக மாற்றுவதற்கான ஒரு யோசனை எனக்கு இருக்கிறதென்று கூறியதுபோல..., அப்படி மாற்றவோ அநேகமாக பொருளாதார ரீதியாக படங்கள் வெற்றி பெற்ற நிலைமை இங்கு இல்லை. அப்படியாயின் அதற்கு காரணம் என்னவாக இருக்கும் அல்லது வெற்றிபெற வைப்பதற்கு என்ன செய்யலாம்?

உண்மையில் நீங்கள் குறிப்பிடுவதுபோல நிறை சவால்கள் இருக்கிறது. பொருளாதார ரீதியாக எங்கள் திரைப்படங்களை வெற்றிபெற வைப்பதற்கு இப்போது நாங்கள் போட்டி போட வேண்டியிருக்கிறது. ஒன்று எங்களுடைய மக்கள் இந்திய தமிழ் சினிமாவை அதிகமாக பார்த்து பழக்கப்பட்டு அந்த இரசனையிலேயே இருக்கின்றனர்.

இரண்டாவது பார்த்தீர்கள் என்றால் நாங்கள் இந்திய தமிழ் சினிமாவோடு இருக்கும் தொழிநுட்பத்தோடும் எங்களால் போட்டிபோட முடியாது. ஆனால் போட்டிபோடக்கூடிய ஒரே ஒரு விடயம் எங்களுடைய திரைக்கதையினால் (Screenplay). யாருக்கும் யாருடனும் போட்டிபோட முடியும், உலகத் தரம் வாய்ந்த படத்துடனும் போட்டி போடலாம். திரைக்கதை என்பது எங்களுடைய அறிவு சார்ந்தது. அந்தப் போட்டிக்கு நாங்கள் தயாராகவேண்டும். தற்போதைக்கு எங்களிடம் இருக்கும் சாதகத்தன்மை அது ஒன்றுதான். ஏனெனில் தொழில் நுட்பத்தில் நாங்கள் உடனடியாக வளர்ந்துவிடமுடியாது.

இருக்கின்ற இன்னுமொரு பெரிய சவால் என்னவென்றால் விநியோகஸ்தர்கள் (Distributers)> படத்தை வாங்கி விற்பனை செய்யக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய விநியோகஸ்தர்கள் (Distributer) பங்குகள் குறைவு. இதற்கு அடிப்படை என்னவென்றால் வாடிக்கையாளர், இங்கு போதுமான வாடிக்கையாளர்கள் (Custemers) இல்லை என்பதுதான் பெரிய பிரச்சனை. எங்களுடைய தமிழ் மக்கள் திரையரங்குகளுக்கு சென்று படம் பார்க்கும் மனநிலை அவர்களுக்கு குறைவு. இப்போது இந்தியாவில், அவர்கள் சாப்பிட்டுவிட்டு வீட்டில் கொஞ்ச நேரம் படுத்து இருப்பதற்கு பதிலாக, ஒரு பகல் காட்சியை பார்த்துவிட்டு வருவோம் என்று செல்வார்கள். அங்கு சினிமா என்பது ஒரு கலைவடிவம் நாளாந்த வாழ்கையோடு பிணைந்துள்ளது.

இங்கு பார்த்தீர்களென்றால் நீங்கள் திரையரங்குக்கு போனால் ஏன்டா திரையரங்குக்கு போனாய் என்று அடிக்கும் அம்மாமார்தான் எங்களுக்கு இருந்தார்கள். திரையரங்கிற்கு சென்று படம் பார்த்தாலே குற்றம். அதுக்கெல்லாம் போகக்கூடாது என்று சொன்ன அம்மா அப்பா. அந்த கலாசாரத்தின் விளைவு எங்களுக்கு இப்போதும் திரையரங்குக்கு சென்று படம் பார்க்கும் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைவு என்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. அப்படியாயின் அந்தப் பார்வையாளர்களை வரவைப்பதற்கு தேவையான சந்தையை அபிவிருத்தி செய்வதற்கான தேவை இங்கு நிறையவே இருக்கிறது.

ஒன்று எங்களுடைய திரைப்படம் தரமானதாக இருக்க வேண்டும். அடுத்து திரைக்கதை தரமான தாக இருக்க வேண்டும், சந்தைப் படுத்தல்.. எங்களுடைய படத்தைப் பார்க்க வைப்பதற்கான சந்தைப்படுத்த லுக்கான நிறை வேலை செய்ய வேண்டி இருக்கிறது. இப்போதும் பார்த்தீர்கள் என்றால் நாங்கள் இன்னமும் காட்சி(Show)யாகத்தான் காண்பிக்கிறோம். அப்படியென்றால் திரையரங்கை முன் ஒதுக்கீடு செய்து நாங்கள் ஒரு காட்சியை காண்பிக்கிறோம். உண்மையில் ஒரு சரியான வலையமைப்புக்கூடாக படம் வெளியீடு இங்கு நடப்பதில்லை. அப்படி நடந்தது எனக்குத் தெரிந்தவரை கோமாளிக் கிங்ஸ் என்ற படம் மட்டும்தான். ஆனால் அந்தப்படத்துக்கே எங்களுடைய பக்கத்தில் பெரிய அடிதான் விழுந்தது. வடக்கில் எல்லாம் அவ்வளவு பெரிய அளவில் மக்கள் கோமாளிக் கிங்ஸ் படத்தைப் பார்க்கவில்லை. காரணம் எங்கட மக்கள் திரையரங்குக்கு வந்து படம்பார்க்கும் வாய்ப்பு மிகக்குறைவு. அதேபோல ஊடகங்கள், எங்களிடம் இருக்கக்கூடிய தமிழ் ஊடகங்களின் ஆதிக்கம் இல்லை.

ஈடுபாடு இல்லையென்று, ஈடுபாடு அவர்களுடைய விருப்பம் என்று சொல்லலாம்

இல்லையில்லை ஈடுபாடு இல்லையென்பதல்ல, ஆதிக்கம் இல்லை. நான் ஊடகங்களின் விருப்பம் பற்றி சொல்லவில்லை, ஊடகங்களின் பரவலாக்கம் பற்றி குறிப்பிடுகின்றேன். இப்போ உதாரணத்துக்கு, வடக்கு கிழக்கில் இருப்பவர்கள் அனைவருமே (சில இந்திய ஊடகங்களின் பெயர் குறிப்பிடுகின்றார்). இந்திய ஊடகங்களின் பக்கம்தான் இருக்கிறார்கள் இப்போ (இலங்கையின் பிரபல ஊடகங்கள் சிலவற்றை குறிப்பிடுகிறார்). இலங்கையின் ஊடகங்கள் எமது பிரதேசத்தில் அடைவு (றீச்) இல்லை. ஆனால் ஒரு உயர்வான ஊடகம் எங்களுக்கு தேவையாக இருக்கிறது தற்போது உள்ள இந்த ஊடகங்களைவிட எமது மக்களை ஈர்க்கக்கூடிய ஊடகம் இலங்கைக்கு தேவைப்படுகிறது. அது இருந்தால் எங்களுடைய சந்தைப்படுத்தலுக்கு அது ஒரு புள்ளியாக இருக்கும். அது தெற்கில் இருக்கிறது ஆனால் போதாது. உதாரணத்திற்கு ஹட்டன் நுவரெலியா போன்ற பிரதேசங்களில் இருக்கிறவர்கள் ஓரளவேனும் எங்கள் ஊடகங்களுடன் இணைப்பிலிருக்கிறார்கள் (சில ஊடகங்களின் பெயர்குறிப்பிடுகிறார்). அவற்றைப் பார்க்கிறார்கள் ஆனால் வடக்கு கிழக்கில் வீதத்தில்தானும் இல்லை. செய்தி கேட்பது மட்டும்தான் எம்மவர்கள் இலங்கை செய்தி மட்டும்தான் கேட்கிறார்கள். மற்றப்படி ஒரு தொலைக்காட்சி நாடகம், ஒரு மியூசிக்கல் சோ எல்லாமே இந்திய காட்சிகளைதான் பார்க்கிறார்கள். நீங்கள் அதைப்பற்றி தேடிப்பாருங்கள்...

ஆமாம்... நான் விளங்கி வைத்திருக்கிறேன் வெவ்வேறு வகைகளில் நான் விளங்கி வைத்திருக்கிறேன். ஆனல் உங்களுடைய அபிப்பிராயம் இதுவாக இருக்கும். இது ஒரு நல்ல விடயம் நான் சந்தித்தவர்களுக்குள் நீங்கள் ஒருவர்தான் இந்த விடயதை தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். ஊடகங்களின் விடயத்தை வேறு வேறு வகைகளிலெல்லாம் நான் பார்க்கிறேன்.

நான் நினைக்கிறன் ஒரு பரவலாக்கம் நடந்தாலே சிறப்பு, நான் என்னுடைய முன்னோட்டத்தை (வுசயடைநச) கொண்டுசென்று எங்கே போடுவது. உதாரணம் மார்க்கற்றிங் நான் ரெடி படம் வெளியீடு (Release) செய்வதற்கு தற்போது தயாராக இருக்கிறேன். நான் முன்னோட்டத்தை (வசயடைநச) கொண்டு சென்று எங்கே போடுவேன். எனக்குத் தெரியவில்லை.

அது ஒரு விதத்தில் நான் குறிப்பிட்டதுபோலதான் வரும். அதாவது இவர்களுடைய ஈடுபாடு, விருப்பம் குறைவாக இருக்கிறது என்றும் கூறலாம்தானே.

ஓமோம் சொல்லலாம்...

நீங்கள் சொன்னதைப்போலவே, பார்த்தால் வடக்குக் கிழக்கைப்பொறுத்தவரையில் இந்திய ஊடகங்களை தேடிப் போகின்ற ஒரு சூழல் இருக்கின்றதென்று ஆனால் அதே நேரத்தில் நாங்கள் ஸ்ரீலங்காவின் சனல்களை பார்க்கும்போது அவர்களும் அங்கிருந்து வாங்கியதைத்தான் போடுகிறார்கள். அது இங்கத்தைய படைப்புகளுக்கு ஒரு பெரிய தாக்கம்தானே.

உண்மை... உண்மை... மற்றது இங்கேயிருக்கும் படைப்புகளை வளர வைப்பதற்கான முயற்சிகளில் அரச தரப்பிலேயும் சரியான பிரச்சனைகள் இருக்கிறது எங்களுக்கு...

அதைத்தான் அடுத்து கேடகவேண்டுமென நினைத்தேன்

அதுகூட ஒரு... நெகிழ்வுத்தன்மை(கடநஒைடிடைவைல) உடையதாக ஒரு அரசினுடைய செயற்பாடுகள் அதற்கான நிதி ஒதுக்கீடுகள், போன்றவற்றை அரசு செய்யாதவரைக்கும் அது எங்களுக்கு ஒரு பிரச்சனையாகதான் இருக்கும்.

ஊக்குவிப்புகள், வசதிகள்

ஆமாம்.. எல்லாமே பிரச்சினையாக இருக்கிறது. இப்போ உதாரணத்துக்கு என்னுடைய படத்தை எடுத்துக்கொள்வோம். நான் படம் முடித்துவிட்டேன். இப்போ 5.1 மிக்ஸ் கடந்த வாரம் முடிவடைந்துவிட்டது. அடுத்த வாரம் கலரிங் முடிவடை-யும், அது தற்போது நடந்துகொண்டிருக்கிறது. படத்தை எப்படி நான் திரையரங்கிற்கு கொண்டுவருவது. அப்படியென்றால் உண்மையிலேயே நான் இப்போது இருந்து யோசித்துக்கொண்டிருக்கவேண்டி இருக்கிறது. அதாவது இலங்கையில் அதை நான் சந்தைப்படுத்துவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. நான் ஒரு காட்சியை வவுனியாவில் போடலாம், போட்டால், ஆ.. இயக்குனர் விநோத் என்று சொல்லிவிட்டு செல்வார்கள். அந்த ஒரு பெயருக்காக மட்டும்தான் போடமுடியும். எனக்கு அது இப்போது தேவையில்லை. என்னை நம்பி காசு போட்ட தயாரிப்பாளர் இலாபம் எடுக்க வேண்டும் அப்போ என்ன செய்யலாம் என்றால் இப்போது வரைக்கும் எனக்கு இரண்டே இரண்டு தேர்வுதான் இருக்கிறது.

ஒன்று வெளிநாடுகளில் இருப்பவர்களுடன் கதைத்துக்கொண்டு இருக்கிறேன் அங்கே வெளியிடலாமாவென்று. ஒரு குறிப்பிட்ட வீதத்தை நீங்கள் எடுங்கள் மிகுதியை எங்களுக்கு தாருங்கள் என்ற அடிப்படையில், ஏனென்றால் தயாரிப்பாளர் நட்டப்படமுடியாது, அடுத்த படமும் செய்யவேண்டும், எங்களது தயாரிப்புகளை நாங்கள் சேவையாக செய்யவும் முடியாது. வியாபார நோக்கத்தோடு செய்தால் மட்டுமே இலாபம் அடையலாம். அவருக்கு அடுத்த படம் செய்ய வேண்டும். வெளி நாட்டில் ஒரு நான்கு நாட்டுடன் இப்போதைக்கு நான் கதைத்து முடித்திருக்கிறேன் அதற்கான வாய்ப்பு இருக்கிறது.

இரண்டாவது தேர்வு சிங்கள சினிமா, எப்படி என்னுடைய படத்தை நான் சிங்கள சினிமாவுடன் கொண்டுசென்று போடுவது என்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்று போய்க்கொண்டு இருக்கிறது. இப்போ ஒரு குழுவினருடன் கதைத்திருக்கிறேன் என்னுடைய படத்துக்கான உப தலைப்புகளுடன் முதலில் படத்தை காண்பித்துவிட்டு, அதை அப்படியே சிங்களத்திற்கு மொழிபெயர்த்து, திரைக்கதையை மொழி பெயர்ப்புக்கு கொடுத்திருக்கிறேன், வந்ததும் சிங்கள டப்பிங் செய்து படத்தை சிங்களத்தில் வெளியிடுவது. இது இரண்டும்தான் எனக்கு தெரிகிறது. ஆனால் இந்த படத்தை தயாரிக்க இந்த கதைக்களம் வவுனியாவில் தயாரிக்கப்பட்ட கதைக்களம் இந்த மக்களுக்கு இந்த படத்தை கொண்டு செல்வதற்கு காட்சி மட்டும் காண்பிக்கமுடியும்.

அடுத்து வரக்கூடிய என்னுடைய கேள்விகளுக்கான விடை இந்த பதிலில் ஓரளவு வந்துவிட்டது. அந்த கேள்வி என்னவென்றால் இவ்வளவு விடயங்கள் செய்தாலும் இலங்கையில் வர்த்தக ரீதியில் வெற்றிபெறுமா என்பதுதான். அதற்குரிய விடையின் ஒரு பகுதி அந்தப் பதிலில் வந்துவிட்டது.

மற்றது சிங்களத்தில் செய்யும்போது தொலைக்காட்சி உரிமம் உள்ளது.

ஆமாம்...

தொலைக் காட்சி உரிமத்தை (படத்துக்கான) நோக்கி நாங்கள் இன்னமும் நகரவில்லை. ஆனால் சிங்கள தொலைக்காட்சி உரிமம் பற்றி நாங்கள் யோசிக்கலாம்.

ஒரே நேரத்தில் அதை செய்வதே நல்லது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் தமிழில் இந்த படத்தை வெளியீடு செய்வதற்கிடையிலேயே மொழிபெயர்ப்பை எடுத்து டப்பிங்கையும் செய்து ஒரே நேரத்தில் தமிழ் பிரதேசங்களிலும் சிங்களப் பிரதேசங்களிலும், நீங்கள் யாராவது விநியோகஸ்தர்களை அணுகி, சிங்களத்தில் விநியோகஸ்தர்கள் இருக்கிறார்கள், அவர்களை அணுகி ஒரே நேரத்தில் வெளியிட்டால் ஓரளவுக்கு நீங்கள் அடையக்கூடிய இடத்தை அடைக்கூடியதாக இருக்கலாம்.

நான் சிங்கள வேலை தொடங்கிவிட்டேன். அது நிட்சயமாக அடுத்து....

இல்லை, இது வந்துததன் பின்னர் அது வரும்போது இடைவெளி ஒன்று வந்துவிடும். அந்த இடைவெளியில் படத்திற்கான விமர்சனங்கள் வரும்தானே, அவை வரும்போது விமர்சனம் பிழையாக எதிர் மறையானதாக இருந்தால் அவர்கள் ஏற்றுக்கொள்ள இயலாத தன்மை ஏதாவது ஏற்படலாம்.. விமர்சனம் நேரானதாக இருந்தால் பாதிப்பு இருக்காது, சில வேளை உங்களை தேடிவந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அமையும்.

நீங்கள் சொன்னதுபோல் இரண்டையும் ஒரே நேரத்தில் கொண்டு போகின்ற முயற்சிதான் என்னுடையது. இன்னும் மூன்று மாதம் இருக்கிறது கொண்டுசென்று சேர்ப்பதற்கு. பட வேலை முடிவடைந்துவிட்டது இப்போது சந்தைப்படுத்தல் வேலைதான் இடம்பெற்றுக்கொண்டு இருக்கிறது. அந்த மாதிரி போகும்போது நீங்கள் குறிப்பிட்டதுபோல் சிங்கள சினிமா வெளியீட்டாளர்களிலும் வெளிநாட்டில் வசிப்பவர்களிலும் தங்கித்தான் நாங்கள் இருக்கிறோம். அதில் ஆபத்தும் இருக்கிறது அதையும் சொல்லிக்கொள்ளுகிறேன், அதிலே பெரியதொரு ஆபத்தும் இருக்கிறது.

ஆமாம்... படத்தைப்பொறுத்து...

ஆம், படத்தைப்பொறுத்து. ஆனால் நாங்கள் தயாராகத்தான் இருக்கிறோம். அதைவிட வேற மார்கட்டிங் இல்லை எங்களுக்கு. அதேவேளை இன்னுமொரு சாதகமான பக்கம் தெரிந்தது எனக்கு அதனாலதான் தமிழ் வெளியீட்டை கொஞ்சம் நிறுத்தினேன். இந்தியாவில் இருக்கும் இன்டஸ்றியைச் சேர்ந்த கார்த்திக் சுப்புராஜினுடைய ரீமில் இருக்கும் சோபிதன் அவர்களுடன் எங்களுக்கு ஒரு நெட்வோர்க் கிடைத்தது. சோபிதன் அண்ணா முன்னோட்டம் (வநயளழச) பார்த்தவர். பார்த்து நன்றாக இருக்கிறதென்று கூறியிருந்தார். ஆகவே ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்தியாவிலும் ஒரு காட்சியை முக்கியஸ்தர்கள், விநியோகஸ்தர்கள் (Distributer) போன்றவர்களுக்கு காட்டுவோமா என்று. அங்கு ஒரு இன்டஸ்ரி பார்த்து நன்றாக இருக்கிறது நாங்கள் வேண்டுகிறோம், அல்லது இந்தக் கதை நன்றாக இருக்கிறது தாருங்கள் நாங்கள் திருப்பிச் செய்கிறோம் என்று கேட்டாலோ, அநேகமாக எதுவாக இருந்தாலும் ஒரு சாதகத் தன்மை இருக்கிறது. இதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த மூன்று தேர்வுகளில்தான் அடுத்த படத்தினுடைய வெளியீட்டுத் திட்டம் இருக்கிறது.

ஆமாம்... அதேபோல இந்தியாவுடன் இணைந்து (ஊழடயடிழசயவழைெ) செயற்படுவது போலவும் போகலாம். இந்திய இணைப்புடன் செல்வது அநேகமாக வெற்றியடையாலாம் என்பதை நாம் உறுதி செய்யலாம். அந்த நாட்டினுடைய நடிகர்கள் சிலர் அதேபோல ஒரு சில தொழில் நுட்பவியலாளர்கள் போன்றோரை இணைக்கலாம்

ஆமாம் அவர்களுடைய பெப்சியில் இருக்கும் ஆட்கள் சிலரையும் இணைக்கலாம். அங்கே ஒரு சாதகத்தன்மை இருக்கிறது.

என்னுடைய அபிப்பிராயமும் அதுதான். காரணம் இலங்கையில் திரைத்துறைக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி ஒரு சிறந்த படைப்பை கொண்டுவந்தாலும் எங்கள் சந்தை குறிப்பிட்ட அளவுதான். அதற்கு அப்பால் வெளியேதான் செல்ல வேண்டும். இதை இங்கு தமிழ் திரைத்துறையில் இருப்பவர்கள் பலர் விளங்கிக்கொள்கிறார்கள் இல்லை. இந்த சந்தை வெளியில்தான் இருக்கும். அதாவது சந்தை விரிவாக்கம் (ஆயசமநவ நுஒியளெழைெ) என்று சொல்லுவோம்.

அடுத்தது எங்களிடம் முகப்பெறுமதி (குயஉந எயடரந) உள்ள நடிகர்கள் இன்னமும் இல்லை. இப்போதுதான் அனைவருமே அடிப்படை நிலையில் உள்ளனர். முகப்பெறுமதி (face value), சந்தைப் பெறுமதி (market value) எல்லாமே இங்கு குறைவுதான். ஆகவே நாங்கள் சற்றுக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவின் இணைப்புடன் செல்லும்போது பெறுமதி மிக அதிகமாக இருக்கும். நான் அடுத்த படத்துக்குச்செய்யப்போவது என்னவென்றால், தற்போது செயற்படத் தொடங்கியிருக்கிறேன், அது என்னுடைய படமில்லை, நான் அதை இயக்கப்போவதில்லை, என்னுடைய தற்போதய படத்தின் படப்பிடிப்பாளர் (Camaraman) றெஜி செல்வராசாதான் அதன் இயக்குனராக இருப்பார். நான் அவருடைய படத்திற்கு அசோசியேற் பண்ணப்போகிறேன். இயக்குனராக இருந்தவர் அசோசியேற் பண்ணக்கூடாது என்றில்லை, நாங்கள் நிறைய படிக்கவேண்டியிருக்கிறது.

தவழும் தென்றலுக்கு என்னைப்புரியாதா

- சிறுகதை -

- இரஜகை நிலவன் -

மூன்றே வருடத்தில் திவாகரன் கண்மூடித்தனமான வளர்ச்சி சசிகலாவிற்கு மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. திவாகர் தன்னிடம் காதலை வெளிப்படுத்திய போது தான் திட்டி அனுப்பியதும், அவன் சவால் விட்டுப் போனதும் நேற்றே தான் நடந்தது போலிருக்கிறது. ஆனாலும், மூன்று வருடங்களாகி விட்டன.

“ஒரு சாதாரண இரும்புப் பட்டறையில் வேலை செய்யும் நீ...ஒரு கம்பெனியின் சொந்தக்காரரின் மகளைக் காதலிப்பதா? உனக்கு வெட்கமாக இல்லை?”

“காதலுக்கு உயர்வு தாழ்வு கிடையாது சசிகலா. எனக்கு உன் மீது காதல் உணர்வு பிறந்ததற்கு காரணம் உன் பண உயரம் அல்ல. உன் நடை உடை பாவனை. பழகும் முறை... அப்கோர்ஸ் உன் அழகும் தான் காரணமே யொழிய நீ சொல்லும் பணத்தைக் குப்பையில் கொட்டு.”

“உனக்குப் பணத்தைப் பற்றி என்ன தெரியும். தினக்கூலி செய்து கஞ்சி குடிப்பவனுக்கு காரும் பங்களாவும் வாங்குவது எப்படி என்று சொன்னால் புரியவாப் போகிறது. மிஸ்டர் திவாகர் பணம் காசு சம்பாதிப்பது அவ்வளவு ஈஸியான வி'யமில்லை.”

“அது ஒன்றும் மலையைக் குடைகிற வி'யமில்லை மேடம்.”

“எங்கே உன்னால் ஒரு லட்ச ரூபாய் சம்பாதித்து காட்ட முடியுமா?”

“ஒரு லட்சம் என்ன... எனக்காகக் காத்திருக்கிறேன் என்று சொல், இந்த உலகத்தையே வாங்கிக் காட்டுகிறேன்.”

“எங்கே நான் கிழவியாகி சாகக் கிடக்கப் போகிற நேரத்தில் வந்து தாலி கட்டப் போறியா? சும்மா காதல் வசனம் சவடால் விடறதை யெல்லாம் விட்டு விடு.”

“ஓ.கே. மூன்று வருடம் கொடு. நான் உன் அப்பாவை விட அதிகமாகச் சம்பாதித்துக் காட்டினால் என்னை மணந்து கொள்வாயா?”

“…..”

“என்ன மவுனமாகி விட்டாய் சசி? உனக்கு என் மேல் காதல் உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் என் ஏழ்மையை நீ அடிக்கடி குத்திக்காட்டி பேசுவதுதான் எனக்கு புரியவில்லை. ஏழைகள் எல்லாம் காதலிக்கக் கூடாது என்றோ, ஏழைகள் பணக்காரப் பெண்களை கண்களால் ஏறெடுத்துப் பார்க்கக் கூடாது என்றோ எங்காவது சட்டம் போட்டிருக்கிறார்களா?”

“இதெல்லாம் வீண் பேச்சு திவாகர். சரி இன்றிலிருந்து மூன்று வருடம் கழித்து என்னைச் சந்தியுங்கள். அப்போது நீங்கள் எவ்வளவு பணம் சம்பாதித்திருக்கிறீர்கள் என்று பார்க்கலாம். அப்போது நம் காதல் கை கூடுமா என்று யோசிப்போம்.”

“சசிகலா…காதலுக்கு விலை பேசுகிறாயா? காதல் தானாக வரக்கூடிய காட்டாற்று வெள்ளம். அந்த நீரை அள்ளிக் குடிப்பதற்கு கூட காசு கேட்கிறாயா?”

“திவா… வீணாக வசனம் பேச வேண்டாம். வாழ்க்கைக்கு அத்தியாவசியம் பணம். அதை முதலில் சம்பாதித்துக் காட்டுங்கள் பார்க்கலாம்” என்று சவால் விட்டுவிட்டுப் போனது இப்போது கனவா நனவா என்று தன்னையேக் கிள்ளி பார்க்குமளவிற்கு திவாகர் உயர்ந்த அந்தஸ்திற்கு போய் விட்டான்.

அந்தப் பங்களாவின் வாசலில் நின்று யோசித்துக் கொண்டிருந்தவள், உள்ளே போவதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தவள் வாசலுக்கு வந்த காருக்காக வழி விட்டாள்.

காரை நிறுத்தி விட்டு இறக்கிய திவாகர், “வா சசிகலா. நானே இன்றைக்கு உன்னைத் தேடி வர வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்” என்று அவளையும் காரில் ஏற்றிக் கொண்டு கூர்க்கா திறந்த கேட்டின் பாதை வழியே சியாலோ காரை ஓட்டினான்.

“என்ன வி'யம் திவாகர்”

“நீ போட்ட கெடு மூன்று வருடம் இன்றோடு. முடிகிறது தெரியுமா?”

“ஆம்” என்று தலையாட்டினாள்.

“ஓ! நான் வருவதற்கு முன்பாகவே என்னைத்தேடி.. வந்து விட்டாயா? நான் சொன்னேனே… உனக்குள்ளும் என் மேல் அபரிமிதமான காதல் இருக்கிறது என்று…”

சொல்லிக் கொண்டே காரை நிறுத்தி விட்டு கீழே இறங்கியதும், “வா சசிகலா. நாம் வாழப் போகும் சின்ன மாளிகை இதுதான். கண்டிப்பாக தாஜ்மஹாலோ, வசந்த மாளிகையோ அல்ல இது. நம் காதல் வீடு அவ்வளவு தான்.”

சோபாவில் அமர்ந்து விட்டு ”அய்யர் காபி கொண்டு வாங்க” என்றான் சமையலறையை நோக்கி.

“திவாகர் உண்மையிலேயே உங்கள் காதலின் உத்வேகம் எனக்கு மிகவும் நன்றாக புரிகிறது. எப்படி... எப்படி இவ்வளவு வேகமாக...” அவளால் பேச முடியாமல் திணறினாள் சசிகலா.

“நீ சொல்வது எனக்குப் புரிகிறது. உன் மேல் கொண்ட அதீதக் காதல்... நான் இவள் தந்தையின் பணத்தை விட அதிகமாக சம்பாதித்தால் என்னால் என் அன்பு காதலியின் மனசு கிடைக்க வேண்டுமென்பதற்காக நான் எடுத்துக் கொண்ட தீவிரம்தான் என்னுடைய வளர்ச்சி.”

“சில இரவுகளின் நான் கூட என்னைக் கிள்ளிப்பார்த்துக் கொண்டது உண்டு... எப்படி என்னால் இவ்வளவு உயர முடிந்தது என்று.

“ஒரு சாதாரண இரும்புப் பட்டறையில் வேலை செய்த நான், தனியாக காரேஜ் தொடங்கி பணமில்லாமல் கஷ்டப்பட்டு கார் பாடி செய்ய ஆரம்பித்து இன்று எக்ஸ்போர்ட் செய்யுமளவிற்கு என்னால் உழைத்து முன்னேற முடியும் என்றால் அது நீ எனக்கு கிடைப்பாய் என்ற உத்வேகம். சொல் சசிகலா... நான் எப்போது உன் தந்தையை வந்து பார்க்க வேண்டும்?”

“எங்கப்பாவை எதற்கு பார்க்க வேண்டும்!”

“பச்சைக் குழந்தை மாதிரி பேசாதே, உன்னை பெண் கேட்கத்தான் உன் அப்பாவை வந்து பார்க்க வேண்டும்.”

“நாம் கல்யாணம் செய்து கொண்டால் இந்த வளர்ச்சி நின்று போகும் திவாகர்.”

அதிர்ச்சியாக திரும்பியவன், “என்ன சொல்கிறாய் சசி?” என்றான் கர்ச்சிப் எடுத்து முகம் துடைத்துக் கொண்டு.

அய்யர் வந்து இரண்டு காபி வைத்து விட்டுப் போக காபியை எடுத்துப் பருகிய சசிகலா, “திவாகர் இந்த வீட்டிற்குள் நான் நுழையும் போது உங்கள் வளர்ச்சியையும், உங்களை அடையப் போகும் அதிர்ஷ்டத்தையும் நினைத்து பெருமைப் பட்டேன்” என்றாள்.

“அப்புறம் என்னாயிற்று?”

“என் காதலைத் துறந்து விடலாம் என்று நினைக்கிறேன் திவாகர்.”

“உனக்கென்னப் பைத்தியமா பிடித்து விட்டது சசி?”

“ஆமாம் திவாகர், உங்கள் வளர்ச்சி மேல் எனக்கு பைத்தியம் பிடித்து விட்டது. நீங்கள் என் மேல் கொண்ட காதல் உண்மையானால் இன்னும் கோடி கோடியாக சம்பாதிக்க வேண்டும். அதை நான் தூரத்திலிருந்து பார்க்க வேண்டும்.

“நம் காதல் கல்யாணத்தினால் உங்கள் வளர்ச்சி தடைப்பட நான் ஒரு போதும் தடைக் கல்லாக இருக்க மாட்டேன். அதற்காக இன்னொருவனை என் வாழ்வில் ஏற்றுக் கொள்வதே, இல்லை திருமணம் செய்து கொள்வதோ இனி என்றுமே கிடையாது.

“உங்களுக்காக, ஒரு காதலி, கன்னியாக உங்கள் வளர்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்ற நம்பிக்கையோடு நீங்கள் வளர வேண்டும். இந்தியாவின் பணக்காரர்களுள் ஒருவராக நீங்கள் திகழப் போவதை நான் பார்த்து மனமார ரசிக்க வேண்டும். அது கண்டிப்பாக என் அன்புத் திவாகரால் முடியும். நீங்கள் செய்து காட்டுவீர்கள். வருகிறேன்” என்று சொன்னவாறு விருட்டென்று கிளம்பினாள் சசிகலா.

- முற்றும் -



ஐக்கியமே பலம்...

- ஆ. பாலசுப்பிரமணியன் -

தூத்துக்குடி

ஐக்கியமே பலம்
உழைப்பே மூலதனம்
ஐயங்கள் நீங்கி
வாழ்வது உத்தமம்
உண்மையாக உழைத்தால்
உயர்வு நிச்சயம்
உழைக்கும் மக்களை
உலகம் போற்றிடும்
ஒற்றுமையே முக்கியம்
ஒன்றுபட்டால் வெற்றிமுகம்
ஒருமித்தக் கருத்துகள்
கொண்டால் ஏறுமுகம்
வேற்றுமைகள் அழிந்திட
வேறுபாடுகள் மறைந்திடும்
நேர்மையைக் கடைப்பிடித்திட
நேர்வழி காட்டிடும்
வாய்மை பேசிட
வாய்ப்புகள் பெருகிடும்
வாழ்வாதாரம் உயர்ந்திட
வாழ்க்கை சிறந்திடும்
பாடுபட்டு உழைத்திட
வெற்றி நிச்சயம்
பார் போற்ற
வாழ்வது இலட்சியம்

- கோதைவடிவு (மலர்கோதை) -

காங்கேயம்

ஐக்கியமே பலம்
ஒன்றுகூடி கரைந்து
உண்ணும் காக்கை
தினமும் பண்பை
உணர்த்தி சொல்லுதே
பகிர்ந்து உழைத்தால்
பலனும் வருமே
பலரின் முயற்சி
பட்டறிவும் தருமே
திறமை கூடினால்
சிறக்கும் பொருளுமே
திடமான செயலால்
கிட்டுகையும் பெருகுமே
கூடி நின்றால்
இடரும் அகலுமே
ஓடி வந்து
துன்பம் துடைக்குமே
வேலைக்கு ஊதியம்
நிகராய் கிடைக்குமே
விரைவான பணியும்
ஓய்வு தருமே
மண்ணில் இயந்திரம்
நிறைந்து வந்தாலும்
மானுடம் என்றும்
வளர்ந்து நிற்குமே

ஐக்கியமே பலம்...

- கவி சந்திரா -

ஐக்கியமே பலம்

ஒற்றுமை உணர்வு

மிகுந்திட உயர்வே

ஒருமை காணாது

இருப்பின் அழிவே

கூடிவாழ்ந்தால் கோடி

நன்மை யென்பதும்

நாமறிந்த வாய்மொழி

உழைக்கும் வர்க்கம்

உழைத்தால்தான் வாழ்வுண்டு

நமக்கு இவ்வையகத்தில்

நாளும் அன்னாரின்

சேவையைப் போற்றுவோம்

உழைப்பாளியின் பணியினால்

உலகம் இயங்குகிறது

அவர்களின் மகிழ்ச்சி

நிலைத்திருக்க உதவுவோம்

உழைப்புக்கேற்ற ஊதியம்

வழங்கிட பேரானந்தம்

செயலாற்றலை மதித்து

நடத்திட பெருமையே

மனிதரிலும் செய்யும்

பணியிலும் என்றும்

உயர்வுதாழ்வு இல்லையே

உன்னதம் காத்திடு - கவி சந்திரா

- தி. ஸ்ரீராமன் -

காங்கேயம்

ஐக்கியமே பலம்

ஒற்றுமை நீங்கில்

ஐக்கியமே பலம்

ஒற்றுமை நீங்கில்..!

எக்கணமும் எத்திக்கும்

தாழ்வும் தோல்வியுமே..!

பக்கத்து வீடோ, நாடோ,

பசித்திருக்க உண்ணாதே..!

அக்கறையுடன் இருப்பதைப் பகிராது

பதுக்கிட எண்ணாதே..!

சேர்ந்திருப்பின் மாடுகளைச்

சிங்கத்தாலும் வெல்ல முடியாதாம்..!

கோர்த்திருக்கும் கரங்களதும்

கொடுமைகட்குப் படியாதாம்..!

ஆர்வமுடன் ஒன்றிணைய

ஆக்கங்கள் நிறையுமாம்..!

நேர்மறைக் கூட்டுறவால்

கெடுபலன்கள் குறையுமாம்..!

உயர்த்திய கரங்களே

உரிமைகளைப் பெற்றிடுமாம்..!

அயர்ச்சியிலாக் கூட்டணியே

ஆதரவினை வென்றிடுமாம்..!

பயனிலாப் பிரிவினையால் பாரதமே அடிமையாக..!

பயனளித்ததே விடுதலை வேட்கையெனும் ஒருமையே

விடியலாக..!!

குறுங்கதை

துணிந்து நில்

— சாந்தி குமார் —

சமயநல்லூர் ஊரில் வேலவன் மாதவன் இருவரும் சிறுவயதில் இருந்து நண்பர்கள். இவர்களின் நட்பு மிகவும் உன்னதமானது. இருவரும் மளிகை கடையில் வேலையில் இருந்தனர். இவர்களின் கடை முதலாளி மிகவும் நல்லவர். இவர்களுக்கு போட்டியாக இவர்கள் வேலை பார்க்கும் கடைக்கு அருகிலே மற்றொரு மளிகை கடை ஒன்று வந்தது. முதலாளி இன்னொரு கடை வந்துவிட்டது நமது மளிகை கடை எப்படி ஓடும் என்று மனதிற்குள் வருத்தம் கொண்டார். அதற்கு வேலவன் மாதவன் இருவரும் நமக்கு வரக்கூடியவர்கள் எப்போதும் நம் கடையை தேடித்தான் வருவார்கள். நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள் முதலாளி என்பார்கள். இருந்தாலும் பக்கத்து கடை புதியதாக ஆரம்பித்ததால் பொருட்களின் விலையை மிகவும் குறைவாக கொடுத்து ஆட்களை சேர்த்துக் கொண்டே இருந்தனர்.



வேலவன் மாதவன் இருவரும் வேலை பார்க்கும் மளிகை கடையில் தொழில் முன்பை மாதிரி இல்லாது மிகவும் குறைவாகவே இருந்தது. இதற்கு வருத்தப்பட்ட முதலாளி கடையை அடைத்து விடலாம் என்ற நிலையில் இருக்கிறேன். நிறைய கடன் பட்டு விட்டேன் என்று கூறி புலம்பினார். பக்கத்துக் கடையிலோ வியாபாரம் பட்டையை கிளப்பியது. வேலவன் மாதவன் இருவரும் சற்று பொறுத்திருந்து பார்க்கலாம் முதலாளி உடனே முடிவு எடுக்காதீர்கள் என்று சமாதானம் செய்தனர். அதற்கு முதலாளியும் சரி என்று ஒத்துக் கொண்டார்.

பக்கத்துக் கடையில் அனைத்து பொருட்களையும் பாதி விலைக்கு கொடுத்ததால் அந்த மளிகை கடை முதலாளியும் அக்கம் பக்கத்தில் கடனை உடனே வாங்கி வியாபாரத்தை நடத்தினார் இருந்தாலும் கையை மீறி கடன் பட்டதால் சிறிது காலத்திலே மளிகைக் கடையை மூடும் நிலைமைக்கு தள்ளப்பட்டார்.

வேலவன் மாதவன் இருவரும் முதலாளி நாங்கள் சொன்ன மாதிரி கொஞ்ச காலம் பொறுத்து இருந்து பார்த்ததால் பக்கத்து கடை நஷ்டப்பட்டு கடை முதலாளி கடையை காலி செய்துவிட்டார். எந்த பிரச்சனை வந்தாலும் ஒரு கை பார்த்து விட வேண்டும் முதலாளி. அதற்கு வருத்தப்பட்டு நம் மூளையில் உட்காரக்கூடாது. எதற்கும் துணிந்து நின்று வருகின்ற சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும் என்றனர்.

வேலவன் மாதவன் இருவரையும் நீங்கள் கூறியது போல் நான் கடையை அடைத்து சென்றால் உங்களுக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். இப்போதுதான் எனக்கும் புரிகிறது. எதற்கும் துணிந்து நின்று வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்று. மளிகை கடை முதலாளி இருவரையும் கட்டி அணைத்துக்கொண்டு ஆனந்த கண்ணீர் வடித்தார்.

- முற்றும் -

பறவைகள்

நூல் அறிமுகம்

கே. எஸ். சுதாகர்

மாலினி அரவிந்தன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது கனடாவில் வசிக்கின்றார். கணக்காளராகவும், அதே நேரத்தில் பீல் பிராந்தியக் கல்விச் சபையில் சர்வதேச மொழித்திட்டத்தின் கீழ்ப்பகுதி ஆசிரியராகவும் கடமை புரிகின்றார். பல இலக்கியப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ள இவரின் படைப்புகள் கனடா உதயன், தமிழர் தகவல், தினக்குரல் பத்திரிகை, ஞானம், இனியநந்தவனம், வெற்றிமணி சஞ்சிகைகளில் வந்திருக்கின்றன.

'பறவைகள்' என்ற இந்தத் தொகுப்பில் 10 சிறுகதைகள், 2 சிறுவர் கதைகள், 8 கட்டுரைகள் அடங்கியுள்ளன. பத்து சிறுகதைகளில், சில குறுங்கதைகள் என்ற வகைமைக்குள் அடக்கப்படக் கூடியன. புலம்பெயர் நாடுகளில் வெவ்வேறு இனம், மதம், கலாசாரம் கொண்ட பின்னணியில் வாழும் இருவர், ஒருவருக்கொருவர் துணை தேடும்போது ஏற்படும் சிக்கல் தன்மையை பறவைகள் சிறுகதை பிரதிபலிக்கின்றது. **'எனக்கொரு சினேகிதி'** சிறுகதையானது, காதல் என்பது இதுதான் என்று இலக்கணம் வகுக்கும் கதை. **'புளிமாங்காய்'** என்ற கதை மிகவும் சிறப்பாக நேர்த்தியாக எழுதப்பட்டிருக்கிறது. கனடா பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய **'நீங்காத நினைவுகள்'** என்ற தொகுதியில் இடம்பெற்ற கதை இது.

சிறுவர் சிறுகதைகளில் **'கனவு நினைவாக வேண்டும்'** என்ற சிறுவர் கதை ஒரு அறிவியல் கதை ஆகும். வேற்றுக்கிரக வாசிகளின் அன்ரனாக்களை - பூமியிலே இருக்கும் லேடி பேர்ட், நத்தை போன்றவற்றுடன் ஒப்பிடுகின்றது இந்தக் கதை. கதையை ஒரு கனவு என்று சொல்லாமல், இடையில் நிறுத்தி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது கருத்து. **'மர்ம மாலை'** என்ற தொடர் சற்றே வித்தியாசமானது. பெயருக்கு ஏற்றவாறு அமேசன் காடுகளில் நடக்கும் தொடர் மர்மமாக இருந்தது.

கனடாவில் பிறந்து வளர்ந்த 18 சிறுவர்களுடன் நூல் ஆசிரியரும் சேர்ந்து தொடரை விறுவிறுப்பாக நகர்த்தியிருக்கின்றார்கள். மொத்தம் 20 அத்தியாயங்கள் கொண்ட இத்தொடரின் முதல் – இறுதி அத்தியாயங்களை நூலின் ஆசிரியர் எழுத, ஒவ்வொரு சிறுவர்களும் அந்தத் தொடரை வாசிக்கத் தூண்டும் வகையில் மிக அழகாக எழுதியிருந்தார்கள். நூல் ஆசிரியர் அவர்களை வழிநடத்தி தானும் எழுதியிருப்பது சிறப்பு. இந்தத்தொடரின் இறுதி அத்தியாயமும், நடந்தவை அனைத்தும் கனவு என்று சொல்லவருவது ஏமாற்றமாக உள்ளது.

தொகுப்பில் இடம்பெறும் பெரும்பாலான கட்டுரைகள் ஏதோ ஒரு வகையில் பெண்கள் தொடர்பானவை. அவை விஞ்ஞானத்தில், சமூகத்தில், இலக்கியத்தில் என பெண்கள் அடைந்த முன்னேற்றம் பற்றிச் சொல்கின்றன. முதல் இரண்டு கட்டுரைகளும் விண்வெளி ஆய்வில் பெண்கள் வகிக்கும் பங்கினைச் சொல்கின்றன. அதிகரித்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உருவாகும் புதிய சொற்களுக்கு, மாற்றீடாக தமிழ்ச்சொற்களைக் கொண்டு வருவதில் உள்ள இடர்ப்பாடுகளை ஆராய்கின்றது 'புதியன புகுதலும், பழையன கழிதலும்' என்ற கட்டுரை.சமாதானத்திற்கான நோபல் பரிசுபெற்ற பெண்கள்' என்ற கட்டுரையில் நோபல் பரிசு சார்ந்த பல அரிய தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன.

‘என்னதான் பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறிவிட்டார்கள் என்று சொன்னாலும், இதுவரை கிடைத்த 853 நோபல் பரிசுகளில் 43 நோபல் பரிசுகள் மட்டுமே பெண்களுக்குக் கிடைத்திருக்கின்றன’ என்ற தகவல் ஏக்கம் தருவதாகவே இருக்கின்றது. ‘திருக்குறளைத் திருத்த வேண்டும்’, ‘பாரதிதாசனும் பெண்களை நுகர்பொருளாகத்தான் பார்த்தார்’ என்று சுபமங்களா இதழுக்கு நேர்காணல் வழங்கிய ராஜம் கிருஷ்ணன் பற்றிய கட்டுரை ஒன்றும் இதில் உள்ளது. சிறுவர் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்ட இவர், கனடாவில் வெளிவரும் தூறல் இதழின் சிறுவர் பகுதி ஆசிரியராக இருந்திருக்கின்றார். அதில் இவர் எழுதிய தலையங்கங்கள் சில புத்தகத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளன. அவை புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் படிக்கும் சிறார்களுக்கு உதவியாக பல தகவல்களையும் அறிவுரைகளையும் கொண்டிருந் ததைக் காணக்கூடியதாக இருந்தது.

எழுத்தாளர் மாலினி அரவிந்தன்

‘இந்த உலகத்தை எங்கள் முன்னோர்கள் எங்களுக்குத் தந்துவிட்டுப் போகவில்லை, எங்கள் பிள்ளைகளிடம் இருந்துதான் நாங்கள் கடனாகப் பெற்றிருக்கின்றோம்’ என்று வட அமெரிக்கப் பழங்குடி மக்கள் குறிப்பிடுவதுபோல இந்தப் பூமிப்பந்தைக் கவனமாகப் பாதுகாத்து அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டியது எங்கள் கடமையாகும் என்கின்ற நூல் ஆசிரியர், அந்தக் கடமையில் இருந்தும் வழுவாதவராகவும் இருக்கின்றார். இன்று பெண்கள் எல்லாத் துறைகளிலும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு முன்னேறும் காலம் வந்துவிட்டது. அப்படி தன்னை வெளிச்சமிட்டுக் காட்டிக் கொண்டவர் மாலினி அரவிந்தன்.

இனிய நந்தவனம் பதிப்பகம்

ஆகஸ்டு 2021

விலை ரூ 150

துளிப்பா

மார்கழி மாதம் பணியில்

விளைந்த நெற்கதிர் பூத்து சிரிக்கின்றது

பனமரத்தின் நிழலில் சாலையோர பூக்களாய்

- எஸ். எஸ். கவி செல்வா -

உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில் வெளிவரவேண்டும் என விரும்புவோர் நீங்கள் வெளியிட்ட படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான விமர்சனங்கள் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப iravi.magazine@gmail.com என்ற எமது மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

நன்றி

தமிழிசை என்று சொல்லும்போது அதை இரண்டாக நான் பார்க்கிறேன்.

மேடையில் பாடப்படும் தமிழிசை- பிறமொழியிசை பற்றிய பதிவுகள் வரலாறு கூறுவது ஒன்று. தமிழிசை மேடைகளில் தெலுங்கு கீர்த்தனைகளே ஆதிக்கம் செலுத்துவது, தமிழ்பாடல்கள் பேருக்குத் துக்கடாவாக பாடப்படுவது, தமிழிசை மூவர், தமிழிசையை முன்னெடுத்த முன்னோடிகள், தமிழிசை மன்றங்கள் என்று நம் கருத்துகள் இந்த மேடை இசையையே சுற்றிச் சுற்றி வருகின்றன.

ஆனால் இதற்குத் தொடர்பில்லாத "மக்களிசை" என்ற ஒன்றை இரண்டாவதாகப் பார்க்கிறேன்.

மக்களிசை என்பது பெரும்பாலான உழைக்கும் மக்களின், அடித்தட்டு மக்களின் இசையாகவே இருந்து வருகிறது. இதில் பிறமொழிக் கலப்புக்கே வேலையில்லை.

அன்று ஓடப்பாட்டு, கோவில் கட்ட, சுண்ணம் இடிக்கும் போது பாடும்பாட்டு, வயலில் நடுப்பட்டி, களை-யெடுக்கும் போது பாடும் பாட்டு, படகோட்டிகளின் ஜலசா பாட்டு எனப் பலவகையுண்டு.

படிப்பறிவு இல்லாத பாமர தாய்மார்கள் எதுகை மோனையோடு, கருத்தையும் குழைத்துப்பாடும் தாலாட்டையும், ஒப்பாரியையும் கூட நான் தமிழிசையின் கூறுகளாகவே காண்கிறேன்.

தமிழிசை
ஒரு பருந்துப் பார்வை

கவித்திலகம் வெற்றிப்பேரொளி – தமிழ்நாடு

வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டியர்கள் பற்றிய "கும்மிப் பாடல்கள்" வரலாறுகளைப் பொத்தி வைத்திருக்கும் தமிழிசைப் பாடல்கள்தான் என்று துணிந்து கூறுவேன்.

ஒரு காலத்தில் புகழ்பெற்று விளங்கிய "கொலைச்சிந்து" பாடல்கள் கூட தமிழிசையில் அடக்கமாகும்

அடித்தட்டு மக்களின் தமிழிசை கற்பனை இனிமை மிக்க சொற்களால் ஆன "தெம்மாங்கு" இசையாகும்.

நடவு மற்றும் களையெடுப்பின் போது எழுதப்படிக்கத் தெரியாத என் அக்கா, தங்கைகள், அம்மா, மகள்கள் தங்கள் வாழ்க்கைப்பாடுகளையே பாட்டாக்கிப் பாடுவார்கள். அவற்றில் மாமியார் கொடுமை, நாத்தனார் தொல்லை போன்ற குடும்ப ஆற்றாமைகள் வெளிவரும்.

புதிதாக மணமாகி வேலைக்கு வந்திருப்பவளை குறும்பாக கிண்டல் செய்தும் பாடல்கள் பிறக்கும். கூடவே, வரப்பில் குடைபிடித்து நிற்கும், படியளக்கும் பண்ணையாரைப் புகழ்ந்தும், சாடையாக சாடியும், கங்காணிகள் செயல்களை விமர்சித்தும் கூட பாடல்கள் பிறக்கும்.

எங்கள் கீழைத்தஞ்சையில் விவசாயிகள் பட்ட கஷ்ட நஷ்டங்கள், சாணிப்பால் சவுக்கடி துயரங்கள், செங்கொடியின் எழுச்சி, விவசாய சங்கத்தின் வளர்ச்சி, பொதுவுடைமைத் தலைவர்களின் போற்றி என்றெல்லாம் வயல் வாய்க்கால்களில் தமிழிசை பெருக்கெடுக்கும். ஆனால் பின்னால் அவை திரைப்படத் தாக்கங்களால் வெறும் சினிமாப்பாட்டுகளாகத் தேய்ந்துபோன அந்தச் சோகத்தையும் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆயினும் இப்போதும் நல்லநல்ல கிராமியத் தெம்மாங்குப் பாடல்கள் இளையோர்களால் உருவாகிக் கொண்டுதான் உள்ளன.

இப்படி... மேடைத் தமிழிசை தெலுங்கு போன்றவற்றுடன் போராட வேண்டி வந்தாலும், உழைக்கும் மக்களின் வாழ்விசை தமிழிசையாகவே தலைநிமிர்ந்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

எளிமை.

ந. இரவிச்சந்திரன் – பழனி

எளிமை....
செல்வாக்கு இருந்தும்
ஆர்பாட்டம் ஏதுமின்றி
அமைதியாய் இருப்பது..

எளிமையாய் நடப்பதால்
எண்ணற்றவைகளை சாதிக்கலாம்
காந்திஜி போல

ராசயான சேர்க்கை
ஏதுமற்ற நமது
பழங்கால உணவு வகைகளே
எளிதானவை..தான்.

கந்தையானாலும்
கசக்கி கட்டும்
கதராடை கூட
எளிய உடைதானே..

எளிமையின் கம்பீரம்
பிரமிக்க வைக்கும்
ஏழ்மையில் வாழ்பவர் நிலைகண்டு
தாமும் அதுபோல்
எளிமையாய் வாழ்வது
ஒரு சிலரே

அன்பு பரிசாக
குசேலன் தந்த
அவல் பொதி தானே
அமிர்தத்திற்கு
சமமாய்..ஆனது

விடுதலைப்போரின்போது
வெள்ளையனே வெளியேறு
(quit.. India.movement.at 1942) இயக்கம்
எனும் பெயரை காந்திஜி வைத்ததே
ஒரு ஏழை விவசாயி
காந்திஜிக்கு அனுப்பிய
பஞ்சு பொதியின்
மீதிருந்த காகிதத்தில்
எழுதப்பட்டிருந்த
எளிய வாசகம் தான்
என்பது எத்தனை பேர்க்கு தெரியும்

நதிகள் என்றுமே
அமைதியாகவே தவழும்
எளிமை என்றுமே
எளிதாகவே பெயர் பெறும்

எதற்காகவும் அவசரப்படாது
எளிமை வழி
நாம் நடந்தால்
வெற்றியோ மிகுதி
நட்டமோ குறைவு...

எளிமை
சிக்கனத்தின் மறு பெயர்...
அனைத்துமே தெரிந்தவனுக்கு
எல்லாமே எளிதுதான்...
எளிமை எனும்
ஆனந்தப் பெரு வாழ்வு
நம்மை அழைக்கிறபோது
நாமோ
ஆடம்பரம் எனும்
வறியதொரு வாழ்வை பற்றி நிற்கிறோம்
தினையளவு
நலமேனும் செய்து மகிழ்ந்து
எளிய வாழ்க்கை வாழலாம்
நம்மை வாழ்த்த
அந்த இறைவனே தேடி வருவார்...
அவ்வப்போது...

மரங்கள்

ஞா. கலைச்செல்வி
சென்னை

கவிதை

மரங்களின் மூச்சுக் காற்றில்
மனிதம் வாழ்கிறது
அரசமரம் சுற்றி வந்தால்
அத்தனை கடவுளும்
அருள்புரிவர் ஆலமர விழுதுதனில்
ஊஞ்சலிட்டு மகிழ்வோம்
ஈச்சமரத்தின் ஈகைத்திறனை
பெறுவோம்
வேப்பமர நிழலில் ஓய்வெடுத்து
வேண்டியது பெறுவோம்
நோய்தொற்றிலிருந்து பாதுகாப்பது
பெறுவோம்
வாழைமரத்தால் வசந்தங்களை
பெறுவோம்
வாழ்க்கையை வாழ
வாழையை
நாடுவோம்
தென்னைமரத்தின் அரிய பயனை
அளவின்றிப் பெறுவோம்
இளநீரும் சுவையூட்டும்
தின்னும்
தேங்காயும் தித்திக்கும்
தூக்கியெறியும் மட்டையும்
நாராகுமே
வலுவில் மிஞ்சும் மரமென்றால்
அது புங்கையே
புங்கைமர நிழலிலே புன்னகைத்து
வாழ்வோமே
ஒவ்வொருமரமும் சொல்கிறது
பச்சையாகினும்
பட்டையாகினும் உதவுவேன் என்று
மரங்களைக் காப்போம் மழையதை
பெறுவோம்
நலமுடன் வாழ
நடுவோம் மரங்களை

அழுக்கு மூட்டை

கவிதை

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

அறிவின் இழுக்கு ஆணவத்தில் நடத்தை

அகம் ஒன்றிலே படிந்த அழுக்கை

பார்க்கும் பார்வையில் புரிந்து அழித்திடு

மன அழுக்கை எடுக்க வழி

நீ யார் என்பதை புரிவதே....

நல்லதை செய் நல்ல எண்ணங்களை

கைகொள் அழுக்கான மூட்டையை அவிழ்த்திடு....

மனச்சிந்தனை அறிவுச்சிந்தனை அழிக்காதே... மனித

மூளையின் அழுக்கை அவிழ்த்துவிட்டால் சுகமே

உடல் மனதில் சேரும் அழுக்கு

மாசுவாக மாறுவதே...மனக்கண்ணை திறந்து

மனிதம் கொடுத்து முன்னேற விடு....

பயத்தை உணர்ந்து புரிந்து கொள்

சமயத்தில் சமாதானம் செய்து கொள்

சத்தியமான வழியோடு அறிவை நடத்தினால்

அழுக்கு மூட்டை தானகவே அவிழ்ந்திடுமே......

மரங்கள் காப்போம்

மாரிமும்மாரி மழைபொழிந்தே
ஏரிகுளமெல்லாம் நிறைந்தே.:
மகிழ்வின் பாதையில்
மாண்புடன் திளைக்கனுமே.:
பசுமையான சூழலை
பாங்குடன் அனுபவித்தே.:
பறந்த பூமியை
பசுமையாக்கனுமே.:

முனைவர் செ.ஆயிஷா – பல்லடம்

குடும்பம்

கவிதை

ஆலமரத்தின் விழுதுகளாய்

நின்ற குடும்ப உறவுகள்

இன்று

வெட்டப்பட்ட காடுகளின்

வெறுமையான

தரிசு நிலங்களாய்

பெரிசுகள் என்ற அடையாளத்தில்

மூத்தவர்கள் முதியோர்

இல்லங்களில் நடை பிணமாய்

சகோதர சண்டையில்

குடும்பங்கள் குதறப்பட்டு

குற்றங்களாய்

தனிக்குடித்தனம் என்ற

பெயரில் உறவுகள்

உதிரிகளாய்

இங்கே தொலைந்து போனது

உறவுகள் மட்டுமல்ல

நாளைய சமூகமும் தான்

- ரா.பிரேம் சுரேஷ் -

கோத்தகிரி

ஹைக்கூ கவிதைகள்

வைத்திய கலாநிதி ஜலீலா முஸம்மில் – ஏறாவூர்

1

இலைக்குளம்

நதியில் பயணிக்கிறது

மிதக்கும் எறும்பு

2

பேசத்தெரிந்தது குற்றமா?

கூண்டில் அடைபட்டது

பச்சைக்கிளி

3

ஆசையோடு வாங்கினேன்

பணம் கொடுத்து

ஆசைகளற்ற புத்தனை

4

புதைத்தும்

அடங்காது எழுகிறது

சூரியனை நம்பிய விதை

5

ரயில் நிலையம்

யாசகம் கேட்கும்

புல்லாங்குழல் இசை

6

இரத்த உறவு

காலமெல்லாம் பகை

கடிக்கும் நுளம்புகள்

7

சவக்குழிதான்

சாப்பிடும் உயிர்களை

இந்த வயிறு

8

பால் பருகி

பசியாறுகிறதோ?

நிலாக்கோப்பையில் இரவு

9

பல விமர்சனங்கள்

பல்லாயிரம் விசனங்கள்

மௌனத்தில்

10

சளைப்பதே இல்லை

வளர்த்துக்கொண்டே இருக்கிறாள்

பேரப்பிள்ளைகளை அம்மா

11

குருவி வரைந்த பின்

அழுகிறாள் சிறுமி

பறக்கவில்லை என்று

12

கிளைகள் உண்டு

இலைகள் இல்லை

பல்பொருள் கடை

அது ஒரு கனத்த நாள்



கவிதை

– துளசி –

அது ஒரு கனத்த நாள் (துளசி) கவிதை
அது ஒரு கனமான
கறுத்த நாள்..
சுதந்திரமாக திரிந்து பறந்த இடத்தில் தான்...
நான் இப்போது நினைக்கிறேன்
அது ஒரு சிறு வலி என
என் கால்கள் நடை இழந்தது
நடை பாதையில்
தெரு நாய் ஒன்றின்
பரிதவித்த நிலை போல்
அன்று இருந்தது
தெரிந்த வழிப்போக்கன் ஒருவன்
என்னை கண்டான்
சிறு கம்பொன்றை
கைகளில் கொடுத்தான்
பின் ஆதரித்து
ஊன்றுகோலை பிடுங்கி எறிந்து
கைகளை தந்து தாங்கிச்சென்றான்...
சிறிது காலம் அந்தக்கைகள்
எனக்கு முழு பிடிமானம் ஆனது
அது பழக்கப்பட்டும் விட்டது...
யாரும் இல்லாத போதும் கடவுள்
நம்பிக்கை ஒன்றை தருவார் இல்லையா..?
அதுபோல் ஒரு உணர்வு...
நாட்கள் கழிய கைகளிற்குப்பதிலாக
மீண்டும் அந்தத்தடி வந்தது
கைகள் நழுவியது
மீண்டும் வந்தது
மீண்டும் நழுவியது....
இது வழக்கம் தானே...
நிறவானம் சடுதியாக கருவானமாக
மாறும் போது மழை வரும்

மழை வரும் என ஒரு
ஏக்கம் கொள்ளும் விவசாயி போல
நனைவதற்கு தயாராக
சிறகை உதறும் பறவைகள் போல
உடம்பை சிலிர்த்துக்கொட்டும்
விலங்குகள் போல
என் ஏக்கமும்
அவ்வாறு தான் இருந்தது
மீண்டும் ஒரு நாள்
சில தூறல்கள் பட்டது என்னில்
ஒரே களிப்பு தாங்கவில்லை
எதற்காக என்று
உங்களுக்கும் புரியும் என நினைக்கிறேன்....
என்றும் இல்லாதது போல்
ஒரு அரவணைப்பு அது
முன்பு விடவும்
கூடுதல் நம்பிக்கை அது
மேலும் இரண்டு நாட்களில்
இது நிகழ்ந்தது...
கைகளில் இருந்த தடியும்
பிடுங்கி வீசப்பட்டது
கைகளும் முற்றாக
உதறிவிடப்பட்டுச் சென்றது...
ஆம்... அன்று
மழை வரவில்லை...
அவ்வாறு இல்லை
எனச் சொல்வதற்கு தான்
அன்று அது நிகழ்ந்திருக்கும்....
அன்பென்பது
நான் அறிந்த போதைகளில்
மிகக்கொடுமையானது
அல்ல...

கண்ணாடி – மனம்

- கவிதை -

- அனுராதா சௌரிரா ஜன் -

கண்ணாடி என்றும் ஒரு
கட்டுக்குள் கிடப்பதில்லை
பற்றில்லா சுதந்திரமென
குறை, நிறை காட்டுகிறது!

மனித மனம் ஏதோ
ஒன்றில் பற்று வைக்க,
பற்றுதான் எல்லாத்
துயரங்களின் புற்றாகிறது!

எதையும் தனக்கென
சொந்தம் ஆக்காததால்
எல்லாம் கண்ணாடிக்கு
சொந்தம் ஆகின்றன!

சிலரை மட்டுமே
சிந்தைக்குள் கொண்டாடும்
மனித மனத்திற்கு
மற்றவை அந்நியமே!

அழகாய்த் தெரிந்தாலும்
பழுதாய் இருந்தாலும்
எந்த விசனமும் இன்றி
ஏற்றுக் கொள்ளும் கண்ணாடி!

மனித மனம் மட்டுமே
மதிப்பீடுகள் செய்கிறது!
விருப்பு வெறுப்புகளை
வாங்கிக் கொள்கிறது!

எப்படி நின்றாலும்
எப்பொழுது சென்றாலும்
சலிப்பின்றி அப்படியே நம்
சித்திரத்தை சித்தரிக்கும்!

ஈர்ப்பு உள்ள வரை
ஓடும் மனித மனம்
அடைந்த பின்னர்
அலுப்படைந்து விடும்!
கண்ணாடி அந்த அந்த
கணத்தை மட்டுமே காட்டும்!
வருங்காலம் அறிதலெனும்
சோதிடம் சொல்வதில்லை!

இறந்த காலத்தில்
இறங்கி நின்று-தன்
இரக்கம் தேடும்
மனித மனம்!

ஆறிப்போன புண்களை
கீறிக் கிளறும் மனம்
இறந்த காலத்துக்
கல்லறையில் இருந்திடும்!

இன்பம், இல்லையேல்
துன்பம் என்றிருக்க
வருங்காலம் தேடி
சோதிடம் சுவைக்கிறது!

உள்ளத்தை உணர்ந்திட
கண்களைக் கண்ணாடியில்
உற்றுப் பார்க்க உன்கதை
ஓராயிரம் அது கூறும்!

கண்ணாடி மேல் தூசி
கண்டவர் விமர்சனங்கள்!
துச்சமாய்த் துடைத்து
தூர எறிய வேண்டியவை!

வருவதை வரும் பொழுது
எதிர்கொள்ளும் கண்ணாடியென
எப்பொழுதும் இருந்தால் - வீண்
துயரங்கள் தெரிவதில்லை!

கவிதைகள்

இளையவன் சிவா

இலைத் துளியில் நனையும்
சிறுவனுக்குள்
எட்டிப் பார்க்கலாம்
நின்றுபோன மழையை விட
வீட்டில் விழப்போகும்
அடியை நினைத்த பயம்
மூழ்கிப் போன கப்பலை விட
தேங்கியிருக்கும் நீரில்
நின்றிருக்கும் காகிதக் கப்பலை
எண்ணி
கலக்கமுறும் சிறுவனுக்கும்
இருக்கலாம் துயரம்
வெயிலின் தடத்தைப் போல
எப்போதும் நேராமல்
மழையின் வருகையைப்போல
எப்போதாவது
இருந்து விட்டுப் போகட்டும்
கவலையும் கண்ணீரும்.

2

நெருக்கியடித்த பக்தர்களின்
கண்களுக்கு
காலடியில் துடித்துக் கிடந்த
மனிதர்களின் விழிகளில்
மிதந்து வந்த ஏக்கப் பார்வையே
தெரிகிறது
கடவுளைப் பார்த்தபோது.

3

மோகத்தைத் தூண்டும் முகங்களுக்குள்ளும்
அன்பைத் தேடும் அகத்தை
கற்றுக்கொடுத்து விடுகிறது
உன் முகம்.

ஈழத்தில் வெளிவந்த தமிழ் திரைப்படங்கள் ஒரு தேடல்...

- தமிழ்ப்பாணன் -

குத்துவிளக்கு

இலங்கைத் தமிழ் திரைத்துறை வரலாற்றில் அடுத்து வெளியாகிய திரைப்படம் ‘குத்துவிளக்கு’. இந்த திரைப்படத்தை வி. எஸ். துரைராஜா என்பவர் அதற்கான மூலக்கதையை உருவாக்கியதோடு திரைப்படத்தையும் தயாரித்திருந்தார். இவர் அப்போது யாழ்பாணத்தில் பிரபலமான கட்டடக்கலை ஒப்பந்தக்காரராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரைப்படத்தின் ஒளிப்பதிவை டபிள்யூ. எஸ். மகேந்திரன் மேற்கொண்டதோடு அவரே நெறியாளராகவும் செயற்பட்டிருந்தார். பிரபல கவிஞர் ஈழத்து இரத்தினம் திரைக்கதை மற்றும் வசனத்தை எழுதியடேதாடு இப்படத்திற்கான பாடல் வரிகளையும் எழுதியிருந்தார். இவர் சென்னை யுபிட்டர்ஸ் ஸ்ரூடியோவில் உதவி இயக்குனராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்’ என்ற திரைப்படத்துக்காக எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற பாடலை இவரே இயற்றியிருந்தார் என்பதும் அந்தப் பாடல் அப்போது மிகவும் பிரபல்யமடைந்திருந்த பாடல் என்பது குறிப்பிடப்படவேண்டிய பதிவுக்கரிய விடயமாகம். அப்போது இசையமைப்பில் பிரபல்யமடைந்திருந்த ஆர். முத்துசாமி இசையமைக்க மீனா மகாதேவன் மற்றும் எம். ஏ. குலசீலநாதன் ஆகியோர் பின்னணி பாட அவர்களோடு பின்னணி பாடுவதில் ஆர். முத்துசாமியும் இணைந்திருந்தார். பிரபலமான தென்னிந்திய திரைப்பட நாயகி சௌகார்நாயகி அவர்கள் ஆரம்ப விழவில் கலந்துகொண்டு கமாராவை தொடக்கிவைத்தவர் என்ற பெருமையை இப்படம் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

குத்துவிளக்கு திரைப்படத்தின் ஆரம்ப நாளுக்கான விளம்பரம் இப்படி அமைந்திருந்தது

நமசிவாயம் (சிங்களப் படம் ஒன்றில் நடித்தபோது தனது பெயரை ஜெயகாந் என மாற்றிக்கொண்டவர்), ஆனந்தன், லீலா நாராயணன், பேரம்பலம், எஸ் ராம்தாஸ் (பிற்காலத்தில் மரிக்கார் ராமதாஸ் என அழைக்கப்பட்டவர். இவரது

குத்துவிளக்கு கதாநாயகன் ஆனந்தன்

முதலாவது படம் இது), யோகா தில்லைநாதன், எம். எஸ். இரத்தினம், நாகேந்திரா, பி. இந்திரதேவி, நடராஜன், திருநாவுக்கரசு, ஸ்ரீசங்கர், பரமானந்தன், சந்திரலேகா, பேபி பத்மா, தேவிகா போன்றவர்கள் திரைப்படத்தின் கதாபாத்திரங்களைப் பொறுப்பேற்று நடித்திருந்தனர். அதேவேளை திரைப்படத்தின் ஒளிப்பதிவை டபிள்யூ. எஸ். மகேந்திரன் மேற்கொண்டிருந்தார். மிகப் பாரிய அளவிலான விளம்பரங்கள் இத்திரைப்படத்துக்காக மேற்கொள்ளப்பட்டதாகவும் பெமெடுப்பிலான விளம்பரங்களின் பின்னர் 1972ஆம் ஆண்டு மாசி மாதம் 24ஆம் திகதி திரையரங்குகளில் இத்திரைப்படம் வீ. எஸ். ரி. பிலிம்ஸ் என்ற நிறுவனத்திற்கூடாக வெளியிடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குத்துவிளக்கு திரைப்படத்தின் படைப்பாளர்கள் குழுவினர்

இந்தத்திரைப்படத்தை இயக்குவதற்காக, இந்தியாவில் திரைப்படத் தயாரிப்பு சம்பந்தமான கற்கை நெறியை முடித்திருந்த இலங்கைத் தமிழரும் பிற்காலத்தில் முன்னணி இயக்குனர்களுள் ஒருவராக பழரசித்தி பெற்று வலம் வந்தவருமான இலங்கைக்கு திரைத்துறையில் பெருமை சேர்த்த எம்மவர் ‘பாலு முகேந்திரா’’ அவர்களை முதலில் அணுகியதாகவும் அந்தக் காலப்பகுதியில் அவர் வேறு ஒரு மலையாளப்படம் ஒன்றை இயக்கும் பொருட்டு இந்தியா சென்றமையால் அது இயலாமல் போனதாக அறிய முடிகிறது. இந்த சம்பவம் 1971ஆம் ஆண்டு இடம்பெற்றது.

> “ஈழத்தின் தமிழ்ப்படவுலகின் எதிர் காலத்தை குத்துவிளக்கு உறுதிப்படுத்தி விட்டது.”
>
> - விமர்சகர் ராஜகோபால் -

வறுமைக்கோட்டுக்குட்பட்ட விவசாயக் குடும்பத்தின் மகளாகிய மல்லிகாவுக்கும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த செல்வராஜன் என்ற இளைஞனுக்கும் காதல் மலர்கிறது. வளர்ந்து வந்த காதலை விரும்பாத பணக்கார்திமிர் நிறைந்த செல்வராஜனின் தயாக்கு இதில் துளியளவும் விருப்பமில்லை. அதனை அதற்கு தடையாக அமைகிறாள். பணக்கார வசதிபடைத்த குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு செல்வராஜனுக்கு திருமணம் செய்துவைப்பதற்கான ஏற்பாடுகளை செய்கிறாள் அவனுடைய தாய் நாகம்மா. இதனால் மனமுடைந்துபோன மல்லிகா தன்னைத் தானே மாய்த்துகட்கொள்கிறாள். இதுதான் திரைப்படத்தினுடைய கதைச்சுரக்கம்.

திரைப்படத்தில் நடித்திருந்த ஒவ்வொரு நடிகர் நடிகையரும் தத்தமது கதா பாத்திரத்திற்கமைவாக திரைப்படித்தில் நிஜமாகவே வாழந்திருந்தார்கள். அதிலும் யாழ்ப்பாணத்து மண்வாசனையை சிறப்பாக வெளிக்கொணரும் வகையில் படம் முழுவதும் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கால் நிறைத்திருந்தார் கதாசிரியர். அவ்வாறே காட்சியமைப்புக்கேற்ப யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் வெளி மாவட்டங்களின் சில இடங்களையும் தனது காட்சியமைப்புக்குள் கொண்டுவந்திருந்தார் படப்பிடிப்பாளர்.

மொத்தத்தில் அப்போது வெளிவந்த இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களுள் 'குத்துவிளக்கு' திரைப்படமும் ஒரு சிறந்த தயாரிப்பாகவே அமைந்திருந்தது என்றால் மிகையாகாது. அத்தோடு அப்போது வெளிவந்த திரைப்படங்களுள் 100 நாட்கள் ஓடி 100வது நாளைக் கொண்டாடி சாதனை படைத்த முதலாவது இலங்கைத் தமிழ்த் திரைப்படம் என்ற பெருமையையும் இந்தப்படம் பெற்றுக்கொண்டது. இந்தத் திரைப்படம் 100 நாட்கள் ஓடி சாதனை படைத்த அதே காலப்பகுதியில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர் மற்றும் மஞ்சுளா நடித்த ரிக்ஷா'க்காரன் திரைப்படம் நாடு முழுவதிலுமுள்ள தியைரங்குகளில் ஓடிக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சுன்னாகம் திரையரங்கிலேயே இத்திரைப்படம் 100 நாட்கள் ஓடியது ஆனால் 100வது நாள் கொண்டாட்டத்தை திரைப்படத் தயாரிப்பாளர் 14 நாட்கள் மட்டுமே திரைப்படம் ஓடிய கொழும்பிலே அப்போது தபால்துறை அமைச்சராக இருந்த திரு. செல்லையா குமாரசூரியர் அவர்களின் தலைமையில் கொண்டாடியது சரியானதா தீர்மானமா என்பது கேள்விக்குரியதே.

- தொடரும் -

குறுங் கவிதை

மழையில் நனையுது குடைகள்

குடையில் நனையுது மனங்கள்

குளிரில் பற்றிய தீயில்

கொதித்து எழும்புது ஆவி.

- சக்திசம்பத் -

நேரிசை வெண்பா – மரபுக் கவிகள்

வெள்ளை மனம்

உள்ளம் நிறைந்த உயர்குண மேம்பாட்டில்

வெள்ளை மனம்கொண்ட வித்திடம் - கள்ளமில்லை

வள்ளல் குணத்தால் வளர்ந்திடும் பிள்ளையே

அள்ளி வழங்கிடும் அன்பு

-- சரஸ்வதி இராசேந்திரன் –

உள்ளம் விளைந் துவப்பிடை தோன்றிடும்

கள்ளமிலா காதல் கனிந்து - வெள்ளமாய்

பல்கிப் பெருகுமாம் பாரினில் நல்லோரால்

உல்குமாம் உண்மை மனம்.

-- கோவி கேசவன் –

வெள்ளைமனம் என்றுமே வெற்றியைத் தந்திடும்

உள்ளம் மகிழ்ச்சியில் ஊறிடத் - துள்ளுமே

அள்ளும் வறுமை அகற்றுவ தாயினும்

எள்ளும் செயலை எதிர்

-- *பி.பட்டாபிராமன்* –

நேரிசை வெண்பா – மரபுக் கவிகள்

வெள்ளை மனம்

வெள்ளைமனம் கொண்டு விளையாடும் பிள்ளையென்றும்
உள்ளத்தில் கொள்ளும் உவகையே! - கள்ளமில்லாப்
புன்னகை சிந்தும் புதுமை வரமன்றோ!
என்றுமே அன்பை அணிந்து.

-- உடுவிலூர்க்கலா –

வெள்ளை மனத்தை விரும்பிடும் வேளையில்
உள்ளே உணர்ச்சிகள் ஊற்றான – வெள்ளத்தில்
துள்ளிடும் காதல் துணையாக வந்திடக்
கள்ளமில்லாக் கற்பனையில் காண்

-- கண்ணன் நடராசன் –

கள்ளமிலா நெஞ்சில் கடவுள் குடியிருப்பான்
உள்ளத்தில் மாசில்லா ஒப்பற்ற ---வெள்ளைமனம்
எல்லா அறமும் இயற்றியதற் கொப்பாகும்
சொல்லும் குறளும் தொடர்ந்து

-- கவிஞர் சின்ன இளங்கோ கடலூர் –

இங்கே அந்த ஒருங்கிணைப்பு நடக்கவேண்டும் எல்லோரும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். அவருடைய படத்திற்கு இந்தியாவில் இருந்து நான்கு நடிகர்கள் (Artists) உள்ளே வருகிறார்கள். தம்பி இராமையா, சார்லி, ஸ்ராலின் அமைச்சர், எல்லாம் உள்ளே வருகிறார். அப்படி ஒரு நான்கு நடிகர்கள் அவர்களோடு எல்லாம் கதைத்து முடிவாயிற்று தற்போது நேர ஒதுக்குகைக்காக காத்துக்கொண்டிருக்கிறோம்.

சரி... இப்போ இதுவரைக்கும் நீங்கள் செய்த முழு நீளத் திரைப்படங்கள் எவை எனக் கூறமுடியுமா?

ஒன்றுதான் செய்திருக்கிறேன். **'ஆழிக்கிளிஞ்சில்கள்'** என்பது பெயர். கிளிஞ்சில் என்பது நத்தை.

அடுத்துச் செய்யப்போவது?

இப்ப செய்யப்போவதற்கு இன்னமும் பெயர் வைக்கவில்லை. திரைக்கதை முடிந்து நடிகர் தேர்வு இடம்பெற்றுக்கொண்டு இருக்கிறது. சில பெயர்கள் ஏற்கனவே தேர்வில் இருக்கிறது. இது நான் அசோசியேற் பண்ணவிருக்கும்படம். அதைவிட சித்திரைக்குப்பின்னர் மற்றொரு படத்துக்கான வேலையும் ஆரம்பிக்கவிருக்கிறேன். அதற்கான திரைக்கதை ஏற்கனவே முடித்து எனது கையில் உள்ளது.

இந்தக் காலப்பகுதியில் வெளிவந்த ஈழத்து தமிழ் திரைப்படங்களுக்குள் உங்களுக்கு நன்கு பிடித்த திரைப்படங்களை கூறமுடியுமா?

எனக்கு இரண்டு படங்கள் மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது, ஒன்று **'புத்தி கெட்ட மனிதரெல்லாம்'**, அடுத்து மதிசுதாவின் **'வெந்து தணிந்தது காடு'**, இந்த இரண்டும் வேறு வேறு வடிவம் வேறு வேறு கதைக்களம். இதைவிட நிறைய படங்கள் வந்திருக்கின்றன. அவற்றையிட்டு எனக்கு ஒரு குளப்பம் இருக்கிறது. என்னவென்றால் ஒரு இந்திய திரைப்படத்தை இங்கு எடுக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் இதை விரும்பவும் இல்லை.

ம்..ம்... இந்திய வடிவம்

ஆமாம்... இந்திய வடிவம் ரௌடிசம்ஸ் மாதிரியானவை. நாலு பேருக்கு பின்னால் பத்துப்பேர் நிற்பார்கள். அவற்றை நான் விரும்பவில்லை. ஏனென்றால் அப்படியானவற்றை நான் இங்கு பார்க்கவில்லை, யதார்த்தமில்லை. ஆகையால் அது எனக்கு கனக்ட் ஆகுவதில்லை. இங்கே என்ன செய்ய வேண்டும் என்று நாங்கள் தீர்மானிக்கவும் தேவையில்லை. அதை ஏன் கூறுகின்றேன்னென்றால், ஒரு கடைக்கு போனால் நீங்கள் வடை சாப்பிடலாம், இட்டலி சாப்பிடலாம், தோசை சாப்பிடலாம், எது எனபதை பார்வையாளர்தான் தீர்மானிக்க வேண்டும். வடைதான் சாப்பிடவேண்டும் என்பதுபோன்ற இறுக்கமான தீர்மானம் எனக்குத் தேவையில்லை. கலவையான அதாவது **'புத்தி கெட்ட மனிதர்கள்'** போன்ற படங்களும் மதிசுதாவின் **'வெந்து தணிந்தது காடு'** போன்ற படங்களும் வரவேண்டியிருக்கிறது. இது இரண்டும் எனக்கு நன்கு பிடித்திருந்தது. நல்ல படம், நல்ல மேக்கிங் என்பது பற்றி நீண்டநேரம் **மதிசுதா** அவர்களுடனும் நான் கதைத்திருக்கிறேன். ரத்தினம் அண்ணாவின் கோமாளிக் கிங்ஸ் எல்லாம் இரவிரவாக இறங்கி போஸ்டர்கள்கூட ஒட்டினோம். எனக்கு அது தேவைப்பட்டது.

ஆமாம் எனக்குத் தெரியும் அந்தப்படத்தின் மேம்படுத்துகையில் (ீசழஅழவழைெ) அதிகமாக ஈடுபட்டதில் நீங்கள் முக்கியமானவர்.

ஆமாம்... ஒரு படத்தை நாங்கள் கொண்டாடவேண்டும். என்ன கதை எப்படிப் படம் என்பதற்கெல்லாம் அப்பால் எங்களுடையை சினிமாவை நாங்கள் கொண்டாடாமல் வேறு யார் கொண்டாடமுடியும்.

ஏன் நாங்கள் அதைக் கொண்டாடவேண்டும் என்று அதை விமர்சித்தவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால்... அது கொண்டாடப்படவேண்டும். ஒரு கதைக்களம் இருக்கிறது, அந்த பிரதேசத்தின் வட்டார வழக்கு மொழி இருந்தது. அதுதான் கூறுவது வடை மட்டும்தான் கடையில் போடுவோம் என்றால் அது வடைக்கடைதான்.

ஆனால் வர்த்தக ரீதியாக வெற்றிபெற வேண்டுமென்றால் சமூகப்பார்வையுடன் இத்தகைய விடயங்களை மட்டும் வைத்துக்கொண்டு செய்ய இயலுமா?

இல்லை செய்ய இயலாதுதான். இங்கு எல்லாமே வரவேண்டும், தீர்மானிக்கப்போவது மக்கள்தான்.

ம்ம்ம்... இரசிகர்கள் கர்ப்பனைக்காட்சிப் (கயவெயளல) படங்களையே கூடுதலாக விரும்புகிறார்கள். அப்படியானபோது அதை அடிப்படையாகக்கொண்டே நாம் படத்தயாரிப்பில் ஈடுபடமுடியும். வேண்டுமாயின் வர்த்தக ரீயியாக வெற்றிகொள்ளக்கூடியவாறான படங்களையும் கொடுத்து, அத்தோடு வேறு.. ஏதாவது

ஆமாம் விழிப்புணர்வு சமூக கதையம்சம்கொண்ட படங்களையும் வழங்கலாம். என்னுடைய கருத்து எந்த வகையானவொரு படமும் வரலாம். ஆனால் இந்தியாவில் இருக்கக்கூடியவாறான கதைக்களத்தை நாம் செய்யத்தேவையில்லை. அதை செய்வதற்கு கோடிக்கணக்கானபேர் இருக்கிறார்கள். இங்கு எங்களுடைய தனித்துவத்துடன் இவையெல்லாம் வரவேண்டும் என்றுதான் நான் கூறுகிறேன்.

எங்களுடைய தமிழ் சினிமாவுக்குள் உங்களுக்கு பிடித்த இயக்குனர் (னசைநஉவழசள), நடிகர்கள் (யுஉவழசள) என்றால்?

எங்களுடைய தமிழ் சினிமாவுக்குள் என்றால் மதிசுதாவை கூறுவேன். அவர் எனக்கு நன்கு பிடித்த இயக்குனர். நடிகர்களில் தற்போது மணல் திரைப்படத்தில் நடித்த லீ அவர்கள், சிங்கள தமிழ் இணைப்பில் நடித்தவர். அவருடைய நடிப்பு பார்தேன் சிறப்பானது. அதிரன் என்றொரு படம் வரவிருக்கிறது அதனுடைய இயக்குனர். அவர்கள் எல்லாம் நன்றாக செயற்படுகிறார்கள். ஆனந்த ரமணனின் ஆறாம் நிலத்தில் ஆரம்பத்தில் வேலை செய்தேன். அவரும் சிறந்த ஒரு இயக்குனர். ஆறாம் நிலம் ஒரு நல்ல கதைக்களம்.

இவ்வளவு தூரம் பயணித்திருக்கும் உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன?

எதிர் காலத்தில் படம்சார்ந்து என்றால், என்னிடம் தற்போது இருக்கும் கதைக்களம் என்றால் பிரச்சனைதான், பிரச்சனைதான் என்றால் நான் வேறு ஒரு வகையான வேறு ஒரு உலகத்தைக் காட்டும் ஒரு கதைக்களத்தைத்தான் வைத்திருக்கிறேன். அது சிலவேளை இங்குள்ள தமிழ் மக்களுக்கும் பிடிக்காமலும் போகலாம். ஆனால் அந்தப் படங்களின் கதைகளில் எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது.

அப்பிடியான படங்கள்தான் வேறு விடயங்களை வேறு உலகத்தைப் பற்றிச்சொல்லும். இதைப்பார்த்தீர்கள் என்றால் அவதார், ஜுரசிஸ் பார்க் அப்படியான திரைப்படங்கள் சிறப்பான வரவேற்பைப்பெறும். அவர்கள் கற்பனையில் உருவாக்கிய வேறு உலகம்தானே அவையெல்லாம்.

என்னுடைய படம் என்றால், டார்க் பிஸ்னஸ் (darck business) என்று சொல்லப்படுகிற ஒரு எண்ணக்கருவை (concept) நான் வைத்திருக்கிறேன். அதாவது கண்ணுக்கு வியாபாரம் என்றே தெரியாத இருட்டில் நடைபெறும் வியாபாரம்பற்றியது. ஆழிக்கிளிஞ்சில் அதில் ஒரு கதைதான். டார்க் வெப் (dark web) பில் நடக்கும் ஒரு வியாபாரம் பற்றிய கதைதான். அடுத்த கதையும் அப்படித்தான் வைத்திருக்கிறேன். என்னுடைய கனவு ஒன்று இருக்கிறது. அடுத்த படம் இங்கு எடுத்துவிட்டபின்னர், ஒரு படம் இந்தியாவில் எடுக்கப்போகிறேன். ஆனால் அதோட இந்தியாவில் நிற்பதல்ல எனது நோக்கம். நான் இலங்கையில்தான் படம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். ஒரு பெரிய சிறந்த இயக்குநராக இலங்கையில் இருக்கவேண்டும். இந்தியாவில் படம் செய்வதற்கு ஏற்ப என்னையும் நான் மெருகூட்ட வேண்டும் அந்த முயற்சியும் போய்க்கொண்டிருக்கிறது.

ஆமாம் இவ்வளவு தூரம் வந்துவிட்டோம் உங்களுடைய பின்புலத்தைப்பற்றியும் கூறுங்களேன்.

நான் பிறந்தது வவுனியாதான். அப்பா யாழ்ப்பாணம் பெயர் சுப்பிரமணியம். அம்மாவின் பிறப்பிடம் மன்னார். என்னுடைய தந்தை றெயில்வே திணைக்களத்தில் பணிபுரிந்தார். என்னுடைய பெயர் தெரியும்தானே **சுப்பிரமணியம் விநோத்**. மிகப்பெரிய இடப்பெயர்வுகளுக்கூடாகத்தான் எங்களுடைய வாழக்கை நகர்ந்திருக்கிறது. அதனால் நிரந்தரமாக எங்களுக்கென்று ஒரு இடம். இல்லை. அதை அமைத்துக்கொள்ள, வவுனியாவில் செற்றிலாகவே நீண்ட காலம் எடுத்துவிட்டது. இந்தியாவிற்கும் இடம்பெயர்ந்து இரண்டுவருடம் முகாமில் வாழ்ந்தோம். மீண்டும் வந்து மன்னாரில் குடியேறினோம். அப்பாவுக்கு அப்போது றெயில்வேயில் வேலைகிடைத்தது. ஆனால் மன்னார் றெயில்வே பாலம் உடைக்கப்பட்டதோடு அவருக்கு அந்த வேலை இல்லாமல்போனது. பின்னர் பாதை திறக்கப்பட்டதும் வவுனியா வந்து வவுனியா றெயில்வேயில் அப்பா மீண்டும் இணைந்தார். இப்படி பல அனுபவங்கள். நான் எனது கல்வியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலேயே மேற்கொண்டேன். நான் திருமணம் செய்து, எனது மனைவியும் பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் தற்போது இருக்கிறார்கள். நான் வேலையின் நிமித்தம் வவுனியாவில் இருக்கிறேன். திரைப்படத்துடன் தொடர்பான வேலைகள் யாழ்ப்பாணத்தில் நடக்கும். இப்படி இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் இடையில் எனது வாழ்க்கைப்பயணம் ஓடிக்கொண்டே இருக்கிறது.

இதுவரை உங்கள் நேரத்தை ஒதுக்கி என்னோடு செலவளித்தமைக்கு நன்றி விநோத். நான் ஒரு சந்தர்ப்பத்தில் உங்களை சமூக அபிவிருத்திசார் செயற்பாட்டின்பொருட்டு பயிற்றுவிப்பாளராகவும் நீங்கள் பயிலுனராகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் சந்தித்தது. இப்போது இப்படியெரு களத்தில் உங்களை சந்திப்பது பெருமையாக இருக்கிறது. இந்த சந்திப்பு நான் வெளியிட்டுவருகின்ற **'இரவி'** என்ற காலாண்டு மின் இதழுக்காக **'சொல்லாமலே ஒரு சந்திப்பு'** என்ற பகுதிக்காக மேற்கொண்ட சந்திப்பு. **'சொல்லாமலே ஒரு சந்திப்பு'** என்ற பகுதியாகையால் ஆரம்பத்திலேயே நான் இதை குறிப்பிடாமல் கதைக்க ஆரம்பித்தேன். நாங்கள் இங்கு கதைத்த விடயங்களை எமது சஞ்சிகையில் பிரசுரிக்கலாமா. எங்கள் திரைத்துறையில் இருப்போரை நேர்காணல் செய்வது அவர்களை முன்னேற்றுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவோர் குறைவு. மற்றவர்கள் எழுத்தாளர், கவிஞர் போன்றவர்களை வெளிப்படுததுகிறார்கள். நான் இந்தத்துறையில் உள்ளவர்களையும் மேம்படுத்த நினைக்கிறேன். அதனால்தான் இந்த முயற்சி.

ஆமாம்... கண்டிப்பாக. நீங்கள் வெளியிடலாம். நானும் உங்களை இந்த பீல்டில் சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. எனக்கே ஒரு ஆச்சரியம்தான். நல்ல விடயம் சொல்லாமலே ஒரு சந்திப்பு அதுகும் சிறப்பே. சந்திப்பிற்கு நன்றி.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'கதைச்சரம்' சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

- குரு அரவிந்தன் -

சென்ற 13-7-2025 ஆம் ஆண்டு ஞாயிற்றுக் கிழமை கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'கதைச்சரம்' என்ற சிறுகதைத் தொகுப்பு ரொறன்ரோவில் உள்ள பைரவி நுண்கலைக் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

தேனீர் சிற்றுண்டியைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் ஆகியன செல்வி சோலை இராச்குரார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப் பெற்றன. அதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையை முன்னாள் தலைவரும், தற்போதைய துணைத் தலை வருமான குரு அரவிந்தன் வழங்கினார். அதன்பின் தற்போதைய தலைவர் ரவீந்திரநாதன் கனகசபையின் தலைமையுரை இடம் பெற்றது.

தொடர்ந்து கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ், கவிஞர் குமரகுரு, காப்பாளர் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், முன்னாள் தலைவரும் காப்பாளருமான ஆசிரியர் சிவபாலு, கவிஞர் சயந்தன், இராச்குமார் குணரட்ணம் ஆகியோரது வாழ்த்துரைகள் இடம் பெற்றன. அடுத்து மன்றச் செயலாளர் முனைவர் வாசுகி நகுலராஜாவின் நூல் அறிமுகவுரை இடம் பெற்றது. தொடர்ந்து பேராசிரியர். இ. பாலசுந்தரம் அவர்களின் நூல் வெளியீட்டுரை இடம் பெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஏற்கனவே இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருந்தது. கவிஞர் கந்தவனம் அவர்கள் தலைவராக இருந்த போது 'அரும்புகள்' என்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பை தொகுத்து வெளியிட்டிருந்தார். இரண்டாவது தொகுப்பு குரு அரவிந்தன் தலைவராக இருந்த போது, 'சர்வதேச சிறுகதைகள்' என்ற பெயரில் தொகுத்து வெளியிட்டிருந்தார். மூன்றாவது தொகுப்பு 'கதைச்சரம்' என்ற பெயரில் இன்று வெளிவருகின்றது. இதை தலைவர் ரவீந்திரநாதன் தொகுத்திருக்கின்றார்.

இந்த சிறுகதைத் தொகுப்பில் சதிவிரதன் - குரு அரவிந்தன், கூடுகள் சிதைந்தபோது – அகில், இரு துருவங்கள் - க. ரவீந்திரநாதன், பரவைக்கடல் - டானியல் ஜீவா, இலையுதிர் - சிவநயனி முகுந்தன், ஏகாநேகம் - ஸ்ரீரஞ்சனி, நோக்கப்படாத கோணங்கள் - இரா சம்பந்தன், நேர்மை – முருகேசு கிருபாகரன், ஊருக்கும் தெரியாது யாருக்கும் புரியாது – வஸந்தன், நில் கவனி – ஆர். என். லோகேந்திரலிங்கம், மாயவருத்தத்தின் மந்திர முடிச்சு – தேவகாந்தன், மௌனமே பேசு – மாலினி அரவிந்தன், ஈழத்துச் சூரியன் - நவகீதா முருகண்டி, சமரசம் - ஐ. ஜெகதீசன், பெருமிதம் - எஸ். ஜெகதீசன், நாசகாரிகள் - மா. சித்திவினாயகம், பிஞ்சுகள் - கனி விமலநாதன், அறுவடை – அகணி சுரேஸ், காலம் செய்த கோலம் - நாகேஸ்வரி ஸ்ரீ குமரகுரு, ஆழ்வாரே சாட்சி – வீணைமைந்தன், எண்ண அலைகள் - இராஜ்மீரா இராசையா, ஏமாற்றம் தந்த அனுபவம் - த. சிவபாலு, துணை போனாலும் - சிவநேசன் சின்னையா, இப்படியும் மனிதர்கள் - கமலவதனா சுந்தா, 35 வருடங்கள் - சந்திரன் வேலாயும் ஆகிய 25 கனடாத் தமிழ் படைப்பாளிகளின் சிறுகதைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து எழுத்தாளர்களுக்குச் சான்றிதழ்களும், வருகை தந்தோருக்கு விசேட பிரதிகளும் வழங்கப்பட்டன. கனடா ஜே.ஜே. பிரின்ரேசாரின் கைவண்ணத்தில் உருவான இந்த சிறுகதைத் தொகுப்பிற்குச் செல்வி ஓவியா சுபாஸ் அவர்கள் அழகான அட்டைப்படம் வரைந்திருந்தார். நூல் ஆலோசனைக் குழுவில் ரவி கனகசபை, குரு அரவிந்தன், வாசுகி நகுலராஜா, அகணி சுரேஸ், ஆர். என். லோகேந்திரலிங்கம், நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.
தொடர்ந்து முன்னாள் தலைவரும், தற்போதைய துணைச் செயலாளருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் நன்றியுரை இடம் பெற்றது. நூல் வெளியீட்டு நிகழ்ச்சியை முன்னாள் தலைவரும் நிர்வாகசபை அங்கத்தவருமான அகணி சுரேஸ் அவர்கள் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்.

ஹவாய் பழங்குடி மக்களுடன் சில நாட்கள்

– குரு அரவிந்தன் –

ஹவாயின் தலைநகரான கொனலுலு சர்வதேச விமான நிலையத்தில், விமானத்தை விட்டு இறங்கியதும் வாசலில் நின்ற, தழையுடை அணிந்த அழகான இளம் பெண்கள் 'அலோகா' என்று சொல்லி எங்களுக்குப் பூமாலை சூட்டி வரவேற்றார்கள். எனக்கு விமானத்தின் இரைச்சலில் 'அரோகரா' என்பது போலக் கேட்டது. நானும் பதிலுக்கு 'அரோகரா' என்று சத்தம் போட்டுச் சொன்னேன். 'எங்கள் மொழி உனக்கு எப்படித் தெரியும்' என்று அவள் செல்லமாகக் கேட்டாள், அதற்கு 'என்னுடைய தாய்மொழிதான் உன்னுடைய மொழியாகவும் இருந்திருக்கலாம்' என்று அவளுக்குப் பதில் சொன்னேன். அவளது முன்னோர்கள் பிஜி தீவில் இருந்து வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை பின்பு உரையாடும் போது அறிந்து கொண்டேன்.

ஹவாய் தீவுகள் காலத்திற்குக் காலம் பசுபிக் கடலில் வெடித்த எரிமலைக் குழம்புகளால் உருவாகி இருந்தன. சுமார் 2000 மைல்கள் சுற்றாடலில் எந்த நிலப்பரப்பும் இல்லாத இந்தத் தீவுகளில்தான், சுமார் 1500 வருடங்களுக்கு முன்பாகப் 'போலிநே'ன்' என்று சொல்லப்படுகின்ற குடும்ப அமைப்பு இங்கே உருவாகியிருந்தது. முக்கியமாக சமோவா, குக் ஜலண்ட, நியூசிலாந்து, ஈஸ்டர் ஜலண்ட், ரொங்கா, ருவாலு, வால்ஸ், புரூனா, பிஜி போன்ற இடங்களில் இருந்து காலத்திற்குக் காலம் கடலில் ஏற்பட்ட சூறாவளியால் திசைமாறி வந்து, திரும்பிச் செல்ல வழியில்லாமல் இங்கு குடியேறியவர்களே இங்குள்ள பழங்குடி மக்களாவர்.

இங்கு சிறிய தீவுகள் பல இருந்தாலும், சுமார் எட்டுத் தீவுகளே ஓரளவு பெரிய தீவுகளாக, மனிதர் வாழக்கூடியதாக இருக்கின்றன. அவையாவன ஹவாய், நிஹாவ், கவாய், ஓ'ஹு, மொலோகாய், லனாய், கஹுூலாவே, மௌய் என்பனவாகும். வரலாற்றில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஒரு தகவல் என்னவென்றால், இரண்டாம் உலகயுத்தத்தின் போது, யப்பானால் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வைத்த 'பேர்ள்ஹாபர்' துறைமுகமும் இங்கேதான் இருக்கின்றது. 1.42 மில்லியன் குடித்தொகையில், தற்போது 38 வீதமான ஆசியர்களும், 25 வீதமான வெள்ளையர்களும், 15 வீதமான பிலிப்பினோக்களும், 12 வீதமான யப்பானியர்களும், 10 வீதமான ஏனையவர்களும் இங்கு வசிக்கிறார்கள்.

ஆனால் அங்குள்ளவர்களின் உருவ வழிபாட்டைப் பார்த்த போது, அவர்கள் பாதுகாப்பு வேலி போட்டுப் பாதுகாத்த ஓரிடத்தில் சிவலிங்கம் போன்ற கறுப்பு நிறக் கல்லிலாலான உருவ அமைப்பைக் கண்டேன். அதில் மூன்று வீபூதிக் குறிகள் இல்லாததுதான் ஒரே குறையாக இருந்தது. பிறிதொருநாள் அவர்களுடைய கலாச்சார விழா நடக்கும் இடத்திற்குச் சென்ற போது, சோழர்காலத்துக் கட்டிட அமைப்பைக் கொண்ட மாவிட்டபுரம் மாவைக் கந்தனின் கோபுரம் போன்ற உயரமான ஒரு கோபுரத்தை தடிகளாலும் தென்னோலை கிடுகுகளாலும் உயரமாக அமைத்திருந்தார்கள். அதைப்பற்றி வினாவியபோது, பிஜி நாட்டில் இருக்கும் இந்துக் கோபுரம் போன்றதொரு அமைப்புத்தான் அது என்பதை அங்கிருந்த பழங்குடி மகன் ஒருவர் எனக்கு விளங்கப்படுத்தினார். ஹவாயில் நடக்கும் தங்களின் கலாச்சார நிகழ்வுக்காகப் பிஜி நாட்டில் உள்ளதைப் போன்றதொரு இந்துக் கோபுரத்தை இங்கே அமைத்ததாக அவர் குறிப்பிட்டார்.

இன்னுமொரு இடத்தில் 'பாளனி' வீதியில் திரும்பிச் செல்ல வேண்டும் என்று சொன்னார்கள், நான் அங்கே எழுதியிருந்த வீதியின் பெயரை வாசித்துப் பார்த்தேன். "யடயனெ ளுவசநநவ என்று இருந்தது. 'பழனி' என்ற பெயர் திரிபடைந்து பாளனி வீதியாகியிருந்தது. அங்கே நான் சந்தித்த சிலரின் முகச்சாயல் தமிழரின் முகச்சாயல் போல இருந்ததால், அவர்களின் பெயர்களைக் கேட்ட போது, கபாலி, கமலாணி, நளாணி என்றெல்லாம் அறிமுகம் செய்தார்கள். கமலினி என்ற பெயர் கமலாணி என்றும் நளினி என்ற பெயர் நளாணி என்றும் ஆங்கிலத்தில் எழுதிய போது, திரிபடைந்திருக்கலாம் என்று ஊகித்தேன். அவர்களின் முன்னோர்கள் பிஜி தீவில் இருந்து வந்தவர்கள் என்பது தெரிய வந்தது. அவர்கள் தென்னிந்தியாவில் இருந்து கரும்புத் தோட்டப்பணி நிமித்தம் பிரித்தானியர் காலத்தில் பிஜித் தீவுகளில் குடியேறிய தமிழர்களாக இருந்திருக்கலாம்.

ஹவாய் கலாச்சர விழாவிற்கு ஒருநாள் சென்ற போது, தழையுடை அணிந்த ஆண்களையும், பெண்களையும் சந்தித்தேன். அங்கு நடந்த அவர்களின் அந்த நடன நிகழ்ச்சியைப் பார்த்த போது, சங்க இலக்கியப் பாடல் ஒன்று நினைவில் வந்தது.

'தழையணி அல்குள் தாங்கல் செல்லா நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக

அம்மெல் ஆக நிறைய வீங்கிக் கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின'

அவர்கள் தங்கள் பாரம்பரிய உடைகளான தழை உடைகளை அணிந்தே நடனமாடினர். சிலர் இலைகுழைகளில் செய்த தழையணி பாவாடைகளையும், சிலர் நாணல் புல், வைக்கோல் போன்றவற்றில் செய்த பாவாடையும் அணிந்திருந்தனர். தலையிலே பூக்கள் சூடியிருந்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய நடனமான கோலாட்ட நடனத்தைப் போல, தழையணி அணிந்த பெண்கள் கையி-லே உள்ள கோலாட்டக் கோல்களைப் பலவிதமாக அடித்து சுற்றிச் சுற்றி ஆடுவதைக் ஹவாயில் பார்த்தபோது, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்கள், இந்த நாட்டார் கலையான நடனங்களை ஆடிக்காட்டிய போது, இதுவரை வெறும் கற்பனையில் இருந்த தமிழர்களின் சங்ககாலக் காட்சிகளை நி ஜமாகவே கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது போல இருந்தது.

நாங்கள் கண்ணகித் தெய்வத்தை வழிபடுவது போல, அவர்கள் பூமி மாதாவான ஹொமியாவின் தெய்வமகளான 'பல்லே' என்ற பெண் தெய்வத்தை வழிபடுகின்றார்கள். அவர்களின் வழிபாட்டு தலத்திற்குச் செல்வதற்கு ஒரு குன்றின் பாதையில் உயரச் செல்ல வேண்டியிருந்தது. அந்தக் குன்றில்தான் 'யுரசிக்பாக்' என்ற டைனஸோக்களின் பிரபலமான திரைப்படமும், 'கொங்' என்ற இராட்சத மனிதக்குரங்கைப் பற்றிய படமும் திரைப்படமாக்கப்பட்டது. படத்தில் வந்த டைனஸோக்களையும், அவை உலாவித்திரிந்த இடங்களையும் மற்றும் 'கொங்' படத்தில் உடைந்து விழுந்த ஹெலிக்கொப்டரையும் அருகே சென்று பார்க்க முடிந்தது.

எங்களை அழைத்துச் சென்ற ஹினா என்ற பெண்மணியுடன் உரையாடிய போது, அவர் படித்த, ஆங்கில அறிவு கொண்ட பட்டதாரிப் பெண்ணாக இருந்தாலும் பாரம்பரிய பழக்க வழக்கங்களில் நம்பிக்கை கொண்டவராக இருப்பதை அவதானிக்க முடிந்தது. பல வருடங்களுக்கு முன் தங்கள் மூதாதையர் பிஜி தீவில் இருந்து வந்ததாக அவர் குறிப்பிட்டார். அங்கே உள்ள சூழ்நிலை காரணமாகப் புதிய தலைமுறை-றயினர் தமிழ் மொழியை மறந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். கத்தோலிக்கர்களாகப் பலர் மாறிவிட்டாலும், இந்துமத வழிபாட்டின் சாயலை அங்கே மட்டுமல்ல, ஹவாயின் பல இடங்களிலும் அவதானிக்க முடிந்தது.

ஹவாயில் நாங்கள் சென்ற வழிபாட்டுத் தலத்தின் வாசலில், இரண்டு பந்தங்கள் குறுக்காக வைக்கப்பட்டிருந்தன. எங்களை அங்கே நிற்கும்படி சொல்லி விட்டு, நாங்கள் தேவாரம் பாடுவது போல ஹினா பயபக்தியோடு ஒரு பாடலைப் பாடிவிட்டு குறுக்காக வைத்திருந்த பந்தங்கள் இரண்டையும் நிமிர்த்தி வைத்து விட்டு எங்களை உள்ளே அழைத்துச் சென்றார். அதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, 'அப்படி குறுக்காகப் பந்தம் வைத்திருந்தால் உள்ளே செல்லக்கூடாது, பூசாரியோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்டவரோ தான் பாடலைப் பாடிப் பந்தத்தை நிமிர்த்தி வைத்துவிட்டு உள்ளே செல்ல முடியும். இங்கே ஆண், பெண் என்ற வித்தியாசம் பார்ப்பதில்லை என்பதால் எனக்கும் அந்த அனுமதி-யத் தந்திருக்கிறார்கள்' என்றார்.

தென்னிந்தியாவில் வழிபடும் அய்யனார், கருப்பண்ணசாமி போன்ற உருவ அமைப்புகளைப் போன்று மரத்தினால் செய்யப்பட்ட அவர்களின் சில கிராமத்து தெய்வங்களைக் காணமுடிந்தது. அவர்கள் வணங்கும் மூலவருக்குக் கிட்டவாக பூசாரியின் குடிசை ஒன்று இருந்தது. மறுபக்கத்தில் சற்றுத் தள்ளி அவர்களின் பாரம்பரிய 'பறைகள்' ஒரு குடிசையில் வைக்கப்பட்டிருந்தன. பறைகளைப் பார்த்ததும் எனக்கு தாயக நினைவுகள் வந்தன. வழிபாட்டுத்தல பூசைக்காகவோ அல்லது ஏதாவது அவசர தேவைகளுக்காகவோ இந்தப் பறைகளை அடித்துப் பொதுமக்களை அங்கே வரச் செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். பாரம்பரிய பறை என்பதால் அவர்கள் கோயில் திருவிழாக்காலங்களில் 'பறையாட்டம்' போலக் கூட்டமாக நின்று பயிற்றப்பட்ட சிலர் பறையடிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர்களுடைய பாரம்பரிய உணவகத்திற்கு ஒரு நாள் அழைத்துச் சென்றார். எங்களுடைய இராசவள்ளிக் கிழங்குக்களி போல ஊதா நிறத்தில் ஒரு உணவு வகை இருந்தது. காலோ என்கிற ஒரு வகைச் செடியிலிருந்து கிடைக்கும் இந்தக் கிழங்கு உணவை இவர்கள் 'பொய்' என்று அழைக்கிறார்கள். இந்தக் கிழங்கை எடுத்து கறி சமைக்கிறார்கள்.

கரிசல் மண்ணில் ஒரு காவியம்

தொடர் நவீனம்

அத்தியாயம் -- 3

வாசலைத் தாண்டி நான் உள்ளே செல்ல எனக்குள் துணிவு இல்லை. ஏன் அந்த அச்சம். அது எனக்கு விளங்கவில்லை ஆனாலும் அவளுடைய புதிய தோற்றம் அவள் முன் என்னை அவளைவிடச் சின்னவனாக குறுக்கிவிட்டது.

அவளிடம் அந்தக் குறும்புத்தனம் மறைந்திருந்தது. அவள் முகமே புதுப்பொலிவாய் சொலித்தது. என்னிலும் வயது கூடிப் பெரியவளாகத் தோன்றினாள். பாவாடை சட்டை மாறி கூடுதலாகத் தாவணி அவள் பருவ மாற்றத்தை விலாசம் காட்டியது. ஏனோ தெரியவில்லை அவளை போடி வாடி என அழைக்க மனம் துணியவில்லை. என்னை அறியாமலே அவள் மீது ஒரு மரியாதை ஏற்படுகிறது. அவள் பெரிய மனிசி ஆகிவிட்டாள் வயதுக்கு வந்துவிட்டாள் என்ற சொற்களுக்கான விளக்கம் இப்போது எனக்குப் புரிகிறது.

அப்போது எனக்கு வயது பதினான்கு. அவளுக்கும் அதே வயதுதான் ஆனாலும் அவளுக்குள் தெளிந்த அந்த முதிர்சி எனக்குள் வளர்சி இல்லை. அதுதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தலைமுறை இடைவெளி. ஆணைவிட பெண்ணுக்கு அனுபவ ஞானம் வேகமாக வளர்கிறது என்பதும் அறிவியல் உண்மை. அதனால்தான் ஆணைவிட பெண்ணுக்கு திருமண வயது குறைவாக இருக்கவேண்டும் என அக்காலப் பெரியவர்கள் கண்டறிந்து சொன்னார்கள். குறைந்த பட்சம் பெண்ணைவிட ஆணுக்கு ஐந்து முதல் பத்து வயது அதிகம் இருந்தால்தான். ஆணுக்கும் பெண்ணுக்கும் அனுபவ ஞானம் சமநிலை ஆகும் என்பது பழமை கணித்த கணக்கு. ஆணைவிட பெண்ணுக்கு வயது இடைவெளி அதிகமான நிலையில் அவர்களுக்குள் புரிதல் இடைவெளி அதிகரிக்கும். இதைதான் ஆங்கிலத்தில் ஈகோ என்று சொல்வார்கள். அப்படியான நிலையில்தான் குடும்பத்தில் சில சமயங்களில் பிரச்சனைகள், குழப்பங்கள். ஏற்படும்பொழுது அவர்களால் அதைச் சமாளித்துச் சரிக்கட்டி அனுசரித்து இணைந்து வாழ முடியாமல் பிரிய வேண்டிய கட்டாய சூழலுக்குள் அநேக தாம்பத்ய உறவுகள் தள்ளப்படுகின்றன.

எங்களுக்குள் நீண்ட நேர விவாதம் இப்படித்தான் நீண்டன.

கொ.பெ.பி.அய்யா.

“ஏய் உள்ள வாலே..... ஆச்சி வந்தால் என்ன சொல்வாள்....... அவட்ட நாங் சமாளிச்சுக்கிறேன்........ ஹா நீ வாலே”அவள் துணிச்சலாக என் கையைப்பிடித்து இழுக்கிறாள். ஆனால் நான் பயத்தில் அவள் கையைத் தட்டுகிறேன்.

“ஏல ஒன்னுமில்லல........ எங்க வீட்ல நேத்து பணியாரம் செஞ்சாங்க........ ரெண்டத் தாரேன் சாப்பிட்டுப் போல” மீண்டும் என் கையைப்பிடித்து உள்ளே இழுக்கிறாள்.

“வேண்டாம்.......... நாங் இங்கேயே நிக்கிறேன்.......... நீ போயி எடுத்துட்டு வா.......... ஆச்சி பாத்தா.. வையும்.......... எனக்குப் பயமா இருக்கு......... என்ன விடு” எனப் பதறிய மொழியில் மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லுகிறேன்.

‘சரி இவங் வேலைக்கு ஆகமாட்டான்” என எண்ணி அவளே அலுத்துக்கொண்டாளோ என்னவோ, விடுவிடுன்னு வீட்டுக்குக்குள்ளே போனாள். ரெண்டு பணியாரத்தை எடுத்துக்கொண்டு வந்தாள்

“இந்தா...... போல.... பயந்தான்கொள்ளிப் பயல.. நீ.. உன்ன என்ன நாங்...... அவிச்சா தின்னுடப் போறேன்..... பேசி ரொம்ப நாளாச்சே.. பேசலாமுன்னுதான கூப்பிட்டேங்....... இப்படிப்பயந்து சாவுர” என சலித்துக்கொண்டே அவளும் வெளியே வந்து அந்த முருங்கை மரத்தைக் கட்டிப்பிடித்துச் சுற்றினாள்.

நாங் பனியாரத்தை தின்னாமல் கையில் வைத்துப்பார்த்துக் கொண்டே நின்றேன். என்னைக்கவனித்த அவள் என்ன நினைத்தாளோ தெரியவில்லை. கலகலவெனச்சிரித்தாள்.

“ஆமா..ஏஞ் சிரிக்கிற.....உனக்கு கொஞ்சங்கூட பயமே இல்லயா” நானும் பேச ஆரம்பிச்சேன்.

“அட போடா களிமண்ணு..... ஆமா என்னல பயம் உனக்கு,....... ஏண்டா இப்படி ஆயிட்ட...... என்னல ஆச்சு உனக்கு.” என என்னை ஏளனம் செய்து மீண்டும் சிரித்தாள்.

வேறொன்னுமில்ல உங்க ஆச்சியக் கண்டாத்தாங் எனக்குப் பயமா இருக்கு.... கமலா பெரிய மனிசி ஆயிட்டா... அவட்ட இன்னுமே நீ பேசக்கூடாதுன்னு எங்க அம்மாவும் சொல்லிட்டா.. அதான்........”

அதாங் பயந்துட்டயாக்கும்.... அடப்போடா முட்டாள்.... பெரியவங்க இருக்கும் போது அப்படி இருந்துக்க வேண்டியதுதாங்.... அவங்க இல்லாத போது இப்படி நாம பேசிக்க வேண்டியதுதாங்.”

எனப் பெண்ணுக்கே உரிய புத்திசாலித்தனமாகவும் பேசினாள். அப்போது அவள் அறிவை வியந்து பாராட்டும் பக்குவம் இல்லை. அதை இப்போது எண்ணும் போது எனக்குப் பொறாமையாகவும் ஏமாற்றமாகவும் இருக்கிறது. என்ன இருந்தாலும் சமயோசிதப் புத்தி என்பது பெண்களுக்குக் கொஞ்சம் அதிகம்தான். அதனால்தான் பெண்ணுக்குப் பின் புத்தி என்பார்கள். ஆமாம் அவள் பின்னும் பின்னும் என அவள் புத்தி விரிந்து கொண்டே பெருகும். அதனால் பெண்கள் அவ்வளவு எளதில் ஏமாந்துவிடமாட்டர்ர்கள்.

விடுதலையான கூண்டுக்கிளிபோல் என்னையே மகிழ்ச்சியில் பார்க்கிறாள். நேரிலே பூக்கும் மல்லிகைபூவாய் சிரிக்கிறாள். ஆனந்தக்களிப்பில் அந்த முருங்கை மரத்தைப் பாடாய் படுத்துகிறாள். என்ன செய்வது அவள் புரிந்து கொண்டதை நான் புரிந்து கொள்ளவில்லையே. அவள் வயதுக்கு வந்து விட்டாள். நான் அப்போது இப்போது போல் விவரமாக இல்லையே. இப்போது அந்நிகழ்வை நினைக்க நினைக்க எனக்கே கேவலமாக இருக்கிறது. கள்ளமில்லா அந்தப்பிள்ளைப் பருவத்தை எண்ணிப்பார்க்கும் போது பெருமையாகவும் இருக்கிறது. இறைவன் செய்யும் விந்தை அது. வளரும் பருவத்தில் அதை ஒளித்து வைத்து வாழும் பருவத்தில் அள்ளித்தருகிறான். இறைவன் எவ்வளவு பொறுப்பானவன் பார்த்தீர்களா? எதை எதை எந்த எந்த பருவத்தில் மறைக்க வேண்டுமோ அதை அதை அந்த அந்த பருவத்தில் மறைத்தும் உணர்த்தியும் விந்தை செய்யும் அவன் சிறப்பே சிறப்பு.

அந்த முருங்கை மரத்தை அவள் சுற்றி சுற்றி ஆடுகிறாள். நான் எட்டிநின்றுதான் வேடிக்கை பார்க்கிறேன்.

(தொடரும்.)

போலி உறவுகள்...

சிறுகதை

பணம் என்னடா பணம் பணம்

குணம் தானடா...! நிரந்தரம்

வானொலி அலைவரிசையில் பாடல் ஒலித்தது கேட்டபடியே.. தனது அலுவலகம் செல்ல புறப்பட்டார்

கணேசன்...

கணேசன் ஓர் தனியார் நிறுவன முதலாளி. கடின உழைப்பாளி... பல்வேறு நுகர்வுப் பொருட்களை மொத்தமாக வியாபாரம் செய்து சிறு வணிகர்கள் பலரும் தனது கடைக்குவந்து பொருட்களை மொத்த விலையில் வாங்கி. சில்லைறையிலும் தவனை முறையிலும் பொருட்களை விற்றுலாபம் பார்க்கும் பணியை செவ்வனே செய்தார்

அதனாலயே அவருக்கு நல்ல பெயரும் கூட. கடையில் உள்ள அனைத்துப் பொருட்களும் நேரடியாக பெரிய வியபாரிகளிடம் இருந்து கொள்முதல் செய்த போதும் பருவ காலங்களில் சீசனில் கிடைக்கும் பொருட்களை இவரே நேரிடையாக களம் சென்று வியாபாரிகளிடம் பேசி மொத்த விலை கொடுத்து அதனை தனக்குச். சொந்தமான குடோனில் சேர்த்து அதையும் ரகம் பிரித்து சிறிய சிறிய பைகளில் பேக்கிங் செய்து தனது கடை லேபிள் ஒட்டி...

மிகப் பெரிய மில் உற்பத்தியைப் போல தினசரி இவைகள் நடைபெற

நிறைய பேர்களை வேலைக்கும் அமர்த்தினார்...

இவரால் குறைந்தது முப்பது குடும்பங்கள் வரை தினக்கூலியாக பணி செய்து பிழைக்கிற வாய்ப்பு..

கிட்டியது... இவரது வியாபார நுணக்கங்களும் கைகளில் வியாபார நிமித்தம் பணம் புழங்குவதும்.. ஊரில் மிகப் பெரிய அந்தஸ்துடன் இருப்பதுவும் மிகப் பெரிய வளர்ச்சியும் வழக்கம் போலவே உறவுகளின் கைகள் அரிக்க....

நா. இரவிச்சந்திரன் – பழனி

மகளுக்கு கல்யாணம், பேரனுக்கு காது குத்து அது இது என சுப/அசுப சேதிகள் தாங்கி இவரை அணுகிப்பணம் பெற்றுச் செல்வார்கள்

கணேசன் முதலாளியும் உழைப்பின் பயன் பாடு தெரிந்தவர் ஆகையால் தேவையான வர்களுக்குத் தேவையானதைச் செய்துவந்தார்..... **சொந்தக்காரர்களோ சொல்ல வேண்டியதேயில்லை இருந்தால் தான் சொந்தம்**. என எங்கோ படித்தவை அவரது நினைவுக்கு வந்தது....

உதவி என வந்தவர்களுக்கு அதன் பயனை புரிய வைத்து உதவி செய்து, இல்லாதவர்க்குதானே அதன் அருமை புரியும் எனும் வகையில் செயல்பட்டு தன்னைச் சுற்றிலும் பணத் தேவைகளுக்காக துதிபாடும் போலிஉறவுகளை இனம் கண்டு, அவர்களுக்கும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் கிடைத்திட உதவினார்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்...

எனும் குறள் அவர்க்கு மிகப் பொருத்தம்

உதவவும் வேண்டும் அதன் அருமை பெருமை பிடி படவும் வேண்டும்... உறவுகளின் போலித்தன்மை விடுபடவும் வேண்டும் இதுவே நயமான வாழ்க்கை..

...... முற்றும் ......

கடவுளே வேண்டுகிறேன்

சிறுகதை



– கோவை கேசவன் –

காசு பணம் தேவை என்று என் பருவத்தில் வேண்டியது, இன்று என் கண் முன் நிற்கிறது கந்தா, குகனே, சண்முகா. உனக்கு எத்தனை சரணம் போட்டிருப்பேனோ தெரியாது. இன்று நான் உன்னிடம் கடைசியாக கேட்பதற்கு முன் என் கதைய சுருக்கமாக கேட்டிடு என் கடவுளே…..

அது என் பள்ளிப் பருவம். எனக்கு வைத்த பெயர் வடிவேலு. என் அம்மா எனக்காக உழைத்தாள். எங்கப்பா ஒரு குடிகாரர். தினமும் குடிப்பதே அவரது தொழில். இப்படி இருக்க, வருமானம் எங்க வீட்டு தோட்டம் தான்.

அதுவும் எங்கம்மா வழியில வந்தது. நல்ல ஒரு ஐம்பது ஏக்கர் நிலம். செழிப்பான பூமி திருச்சி பக்கமா உள்ள முசிறி தாலுகா. வருமானம் என்றால் வருடத்திற்கு சுமார் ஒரு ஐந்து லட்சம் வரும். நான் ஒரே பையன். படிப்புத்தான் என் சொத்து. அம்மா பல வீடுகளுக்குச் சென்று வேலை செய்து வருவாள். இப்படி இருக்க ஒரு நாள் நான் என் கல்லூரியை முடித்து வீடு வந்தேன். கதவு திறக்கவில்லை.

அம்மாவும் எனக்கு பின் சுமார் ஒரு ஐந்து மணிக்கு மாலை நேரம் வந்தார். என்னம்மா நீயும் இப்பதான் வரீயா என்று கேட்டேன். அதற்கு அவள் ஆமாம் என்னாச்சு உங்கப்பா என்றாள். அவ்வளவுதான் உள்ளிருந்து ஒரு கதறல். அம்மா பயந்து பின் பக்கமாக ஓடினாள். நல்ல வேளை அப்பா…. துவைக்கும் கல் பக்கம் சாய்ந்து விழுந்திருந்தார். அள்ளி எடுத்து அணைத்தேன். பாசம் விடாது அம்மா கதறினாள். அதிகம் படிக்காதவள். என்னை கட்டிக் கொண்டு உனக்கு ஒரு திருமணம் செய்து அதை பாரக்க கூட அதிர்ஷ்டம் இல்லையே,

இப்படி இவ்வளவு சீக்கிரம் கண்ணை மூடி விட்டாரே எனக் கதறினாள். சரிம்மா இப்போ பேசி என்ன பயன். நடப்பதை பார்ப்போமெனச் சொல்லி அப்பாவின் இறுதிச்சடங்கு செய்தேன். உடனடியாக வேலை தேடி கிராமத்தில் அம்மாவை பார்த்துக் கொள்ள யாருமில்லை என்பதால் திருமணம் செய்து கொண்டு இவ்வளவு நாளாக வாழ்ந்தோம் . எனக்கு இரண்டு குழந்தைகள் இருவரும் ஆண் பிள்ளைகள். என்னம்மாவும் இறந்து போனாள். இரண்டு வருடம் ஆகிவிட்டது. எனக்கு இன்று வயது அறுபது கடவுளே….. “ உன் முன் வேண்டுகிறேன். கேட்டதைக் கொடுத்தாய். ஆனால் இன்று வேண்டுகிறேன். உண்மையும் இது. நீ அறிவாய்! நான் யாரென!.

என் இரண்டு பிள்ளைகள் என்னை விட்டுப் பிரித்தாய். சொத்தெல்லாம் என் மனைவியிடம் இருந்து பறித்துச் சென்றார்கள். இன்று எங்களுக்கு இருப்பது என்னம்மா வீடு மட்டும் . குடிகார அப்பாவின் மகனாக இருந்த என்னை குபேரனாக்கினாய். இன்று குடியில்லா என்னை மட்டும் நடுத்தெருவில் நிறுத்தி விட்டாயே….. இறைவா…. பதில் சொல். ஆசை கொண்டால் அகம்பாவம் வரும். ஆசையில்லாது வாழ்ந்த எனக்கு பாசமாக வளர்த்த பிள்ளைகளைப் பிரித்தாயே…. விதி வழி இதுவெனப் புரிந்தாலும் , கை கூப்பி நிற்கிறேன் உன்னிடம்.

முற்றும்



மனைவி: ஏங்க எங்க அம்மா தீபாவளிக்கு உங்களைக் கூட்டிட்டு வரச் சொல்லியிருக்காங்க...

கணவன்: அம்மா தாயே ஆளை விடும்மா. சென்ற தீபாவளிக்கு உங்கம்மா செய்த மைசூர்பாகைச் சாப்பிட்டு கடவாப் பல் ஒன்றை இழந்தாச்சு… இன்னொன்றையும் இழக்க நான் தயாரில்லையம்மா...

ஆ. பாலசுப்பிரமணியன் தூத்துக்குடி.

சிறுகதை

- ஜெனனி மோகன் -

தர்மபுரம் கிராமத்தில் சங்கீதா குடும்பம் வசதியாக வாழ்ந்து வந்தது. ஊரில் அவள் தந்தைக்கு அதிக மரியாதை இருந்தது.

பெரிய வியாபாரம் பார்த்தார் கந்தசாமி. இவருக்கு ஒரே மகளும் மகனும் இருந்தனர்.

ஓய்வில்லாத உழைப்பாளியாக இருந்த இவர் யாருக்கும் எளிதில் உதவிகள் செய்யமாட்டார். (30)

அதே ஊரில் இந்திரன் குடும்பமும் வசித்து வந்தது. தனது மனைவியின் சகோதரனாக இருந்த பொழுதும் அவர்களைக் கந்தசாமி மதித்தது கிடையாது. காரணம் அவர்கள் குடும்பம் மிகவும் பின் தாங்கிய நிலையில் காணப்பட்டது.

இந்திரன் எல்லோருக்கும் உதவி செய்தே வாழ்ந்து வந்தான். இந்திரனின் எகபுத்திரி விதுசா . இவள் படிப்பில் சுட்டித்தனம் மிக்கவளாக விளங்கினாள். அதே வகுப்பில் தான் சங்கீதாவும் கல்வி கற்றாள். இருவருக்கும் கல்வியில் போட்டி காணப்பட்டது.

நிறம் மாறும் மனிதர்கள்

கல்லூரியில் எல்லா தேர்விலும் முதல் நிலையில் விதுசா வெற்றி பெறுகிறாள். போட்டியாக படித்த சங்கீதாவோ தந்தையிடம் இருந்த பணம் எல்லாவற்றையும் வீணாகச் செலவு செய்து கல்வியில் அக்கறை கொள்ளாது தேர்விலே தோற்று விடுகிறாள்.

அரசாங்கத்தின் இறுதிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகக் காத்திருக்கிறது.

"விதுசா ! பெறுபேறுகள் வந்துவிட்டது..."

தந்தையின் உரத்த குரலது. ஓடிச்சென்று தன் அலைபேசியில் பெறுபேறுகளை இணையத்தின் வாயிலாக அறிந்து கொள்கிறாள்.

"அப்பா நான் மாவட்டத்தின் முதல் நிலை மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ளேன்" என்று கூறவும், மிகுந்த சந்தோசத்துடன் மகளைத் ஆரத்தழுவினார்.

சங்கீதாவின் பெறுபேறுகளோ சொல்லும் அளவிற்கு சிறப்பாக இல்லாததால் அவர்கள் அப்படியே அமைதியாக இருந்து விட்டார்கள். சிறிது காலம் சென்ற பின்னர் பல்கலைக்கழகம் செல்வதற்கு விதுசா தயாரானாள்.

"ஏதோ வெளிநாட்டுக்குப் பயணப்படுகிற மாதிரி ஆர்ப்பாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாய்..." அன்னை குமுதா சத்தமிட்டாள்.

"என்ர பிள்ளை படிக்கப் போறது வெளிநாட்டுக்குப் போற மாதிரித் தான். படிச்சு பல்கலைக்கழகம் போனா எல்லோ அதன் அருமை தெரியிறதுக்கு..."

ஆம் அவள் பல்கலைக்கழகத்தின் நான்கு ஆண்டு கல்வி நெறியைப்பூர்த்தி செய்யப்புறப்படுகிறாள். அங்கே பல இன்னல்களுக்கு மத்தியில் முதல் நிலை பட்டதாரியாக பட்டம் பெற்று, நான்கு ஆண்டுகளின் பின்பு வெளியே வருகிறாள்.

அவள் குடும்பம் பட்ட இன்னல்களுக்கு எல்லாம் விடிவு காலம் பிறந்து விடுகிறது. அவள் மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரியாக பணிக்கு அமர்த்தப்படுகின்றாள். அங்கு நல்ல ஊதியம் பெறுகின்றாள். அவர்கள் குடும்பம் செல்வச் செழிப்புடன் மிளிர்கின்றது.

இதனால் கந்தசாமி குடும்பம் அவர் மகன் தேவனுக்கு விதுசாவை திருமணம் செய்து வைப்பதற்கு தீர்மானித்து அவர்கள் இல்லம் செல்கின்றனர். விதுசா படித்தவள் என்பதால் சென்றவர்களுக்கு உரிய மரியாதையை அளித்தாள்.

ஆனாலும் கந்தசாமி மாமா குடும்பத்துடன் எந்தவித உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள். தாங்கள் துன்பத்தில் இருந்த போதும், கஸ்டப்படும் போதும் உதவி செய்யாதது மட்டுமல்ல, தன் குடும்பத்தை இழிவு படுத்தியவர், இன்று தன்னை மருமகளாக ஏற்றுக் கொள்ளவும் வசதிகள் வந்ததும் ஒட்டி உறவாடவும் வந்த தன் மாமாவின் உள்ளத்தை எண்ணி மனம் வருந்தினாள்.

நிறம் மாறும் மனிதர்களின் குணங்களிலிருந்து முற்றிலும் மாறுபாடான தன் பெற்றவர்களின் உயர்ந்த உள்ளத்தை உணர்ந்து கொண்டவள் அந்த நிம்மதியில் மகிழ்வுடன் உறங்கச் சென்றாள்.

விசேட திறன்மிக்க வளவாளர்களால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவரா நீங்கள்

தொடர்புகொள்ளுங்கள்: வியூகம் அபிவிருத்தி ஆலோசனைகள்

(Viuham Development Consultancies) 0771682536

தலைமைத்துவம்	Leadership
முகாமைத்துவம்	Management
சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்	Marketing management
தொழில் முயாற்சியாண்மை	Entrepreneurship
நிறுவன முகாமைத்துவம்	Organizational Management
திட்டச் சக்கர முகாமை	Project Cycle Management
வியாபாரத்திட்ட தயாரிப்பு	Business Plan Development
தர்க்கச் சட்ட வரைபு	Logical Framework Development
கண்காணிப்பும் மீளாய்வும்	Monitoring and Evaluation
பங்கேற்பு கிராமிய கணிப்பீடு மற்றும் தேவை இனம்காணல்	Participatory Rural Appraisal and Need Assessment
வசதிபபடுத்துதல் மற்றும் முன்வைப்புத்திறன்	Facilitation and Presentation Skills
பயிற்றுவிப்பாளர் பயிற்சி	Training of Trainers
வியாபார ஆலோசனை	Business Counseling

குவியம் விருதுகள்

சர்வதேசமெங்கும் திரைப்படத்துறையில் தடம்பதித்து செயற்பட்டு வருகின்ற கலைஞர்களுக்கு அவர்களுடைய ஆளுமையை கௌரவித்து பல்வேறு வகையான விருதுகள் பல்வேறு நிறுவனங்களால் ஆண்டுதோறும் வழங்கப்படுவது நாம் அறிந்ததே. விருது வழங்கும் நிறுவனங்களை பட்டியலிட்டால் ஒரு நீளமான பட்டியல் தயாராகிவிடும். இது திரைப்படத்துறையில் தங்களை ஈடுபடுத்தியிருக்கும் சகலரையும் ஊக்கப்படுத்துவதாக அமையும்.

அந்தவகையில் விருது வழங்கும் நிறுவனங்களின் பட்டியலில் தன்னையும் இணைத்துக்கொண்டு ஈழத்துத் திரைப்படக்கலைஞர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதே **'குவியம்'** ஊடக நிறுவனமாகும். கடந்த மூன்று வருடங்களாக சிறப்பாக வெற்றிகரமாக விருது வழங்கும் நிகழ்வினை நடத்திய **குவியம்** ஊடக நிறுவனம் இந்த வருடம் தனது நான்காவது விருது வழங்கும் நிகழ்வை கடந்த புரட்டாதி 07ஆம் நாள் வெகு சிறப்பாக நடாத்தி முடித்திருக்கிறது.

இந்த நிகழ்வு இம்முறை கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரிக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் இந்திய திரைப்பட இயக்குனர் இளங்கோ அவர்கள், இலங்கை வானொலியின் புகழ்பெற்ற தொகுப்பாளராக விளங்கி உலகெங்கும் பிரசித்தி பெற்ற ஒருவராக வலம்வரும் அப்துல்ஹமீட் அவர்கள் போன்றோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டமை சிறப்பம்சமாக இருந்தது.

குறுந்திரைப்படம், முழு நீளத் திரைப்படம், இசைதொகுப்புகள் என்று திரைப்படத்துறை சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தேர்வுகள் இடம்பெற்று தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இம்முறை 48 கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டதோடு சிலர் சிறப்பு விருதுக்குரியவர்களாக தேர்வுசெய்யப்பட்டு விருதுகள வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

வருடந்தோறும் இந்த விருது வழங்கும் விழாவில் வாழ் நாள் சாதனையாளராக மதிப்பளிக்கப்படும் ஒரு நபருக்கான விருதை இந்தத்தடவை ஈழத்தின் மூத்த திரைப்படக்கலைஞர் **நடிகர் ராஜா கணேசன்** அவர்கள் பெற்றுக்கொண்டமையானது சரியான நேரத்தில் சரியான நபரை தேர்வுசெய்த சிறந்த முடிவாக அனேகமானவர்களால் பாரட்டப்பட்டது. அத்தோடு நடிகை கமலஸ்ரீ மோகன்குமார், நடிகர் இளங்கோ ஜி சுதாகர், பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின், இயக்குனர் கிங் ரட்னம் மற்றும் இசையமைப்பாளர் ஸ்ருதி பிரபா ஆகியோரும் இலங்கை சினிமாத்துறையில் 10 வருடங்களுக்கும் மேலாக இயங்கி வரும் கலைஞர்களுள் தெரிவு செய்யப்பட்ட ஐந்து கலைஞர்கள் என்ற அடிப்படையில் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை மிகச்சிறப்பான ஓர் அம்சமாக அமைந்தது.

இந்த நிகழ்வில் வரவேற்பு நிகழவுகளோடு விசே உரைகள், மற்று நடன நிகழ்வுகள் போன்றவையும் இடம்பெற்றன. குவியம் நிறுவனத்தின் ஸ்தாபகர், அப்துல் ஹமீட் மற்றும் ஏனைய சில விசேட பிரமுகர்களினது சிறப்புரையுடன் விருது வழங்கி மதிப்பளிப்பும் நிகழ்வம் இடம்பெற்றதோடு விழா சிறப்புற நிறைவெய்தியது.

‘இரவி’ சஞ்சிகை

மென் மேலும் வளர்ச்சிபெற்று

காலகாலத்துக்கும்

சிறப்பான படைப்புகளை தாங்கி வெளிவந்து

வாசகர்களை மகிழ்விக்க வேண்டுமென

உளமார வாழ்த்துகிறோம்…….